பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

சைவ முன்னேற்றச் சங்கம் UNITED KINGDOM கலசம்

"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

SAIVA MUNNETTA SANGAM 21.8.77 UNITED KINGDOM

பருவ வெளியீட்டுப் பகுதி
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



## பொங்கல் வந்தது;
## பொங்கட்டும் மகிழ்ச்சி

ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Satash Community Care






உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592

**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



கலசம்
KALASAM

மணி 33 ஒலி 113

www.saivamunnettasangam.com Charity Registration No:292085

FREE ISSUE

கலசம்
நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

விநியோகம்
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

விளம்பரம்
நிருவாகம்
சிவ தம்பு
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

இலங்கைத் தொடர்பு
வை சிவனருட்செல்வர்
தொலைபேசி
0766167547
மின்னஞ்சல்
svarul@yahoo.co.uk

வெளியீடு
சைவ முன்னேற்றச் சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com

# வழிபடுவோம்; வழி சமைப்போம்

அண்மையில், சில வருடங்களாக இயற்கை அழிவுகள் அடிக்கடி நிகழ்கின்றன. முன்பும் இப்படி அழிவுகள் நிகழ்ந்துள்ளன. தோணிபுரம் என்ற பெயர் சீகாழிக்கு வந்ததே ஊழிக்காலத்தில் உலகைக் காத்ததால் என்று வரலாறு கூறுகின்றது. விவிலியத்திலும் இதுபோலக் கதை ஒன்றுண்டு. பூகம்பம், வெள்ளப்பெருக்கு, காட்டுத்தீ, புயல் - சூறாவளி ஆகியவையே அழிவை ஆக்குகின்றன. மனிதர்கள் சூழலை மாசுபடுத்த, வெப்பநிலை மாற்றம் ஏற்படுவதால் இப்படி நிகழ்கிறது என்று விஞ்ஞானிகள் விளக்கம் கொடுக்கிறார்கள். இயற்கை சீற்றம் அடைவதால் இப்படி நிகழ்கின்றது என்று நம்மை நாம் தேற்றிக்கொள்கிறோம்.

நமக்கு முன் வாழ்ந்த ஞானிகள் அழிவுகளிலிருந்து நம்மைக் காக்க வழிகாட்டியுள்ளார்கள். அப்பர் பெருமான் அவருள் ஒருவர். நாம் அதை அறியாதிருக்கின்றோம்.

ஐம்பெருமா பூதங்காள் ஒருவீர் வேண்டிற் றொருவீர் வேண்டீர் ஈண்டிவ் வவனியெல்லாம்
உம்பரமே உம்வசமே யாக்க வல்லீர்க் கில்லையே நுகர்போகம் யானேல் வானோர்
உம்பருமா யூழியுமா யுலகேழாகி ஒள்ளாரூர் நள்ளமிர்தாம் வள்ளல் வானோர்
தம்பெருமா னாய்நின்ற அரனைக் காண்பேன் தடைப்படுவே னாக்கருதித் தருக்கேன் மின்னே
திருமுறை 6 பதிகம்27 பாடல் 2

"ஐம்பெரும் பூதங்களே!, இந்த உலகத்தை உம்வசப்படுத்தி உங்களிலே தங்கியிருக்க வைப்பதில் நீங்கள் வல்வர்கள். ஆனால் என்னிடம் நீங்கள் நுகர்வதற்கு எதுவும் இல்லை. ஏழுலகாய், தேவர் தலைவனாய், திருவாரூரில் அமுதமாய் இருக்கும் இறைவனை நான் வழிபடுவதால் உங்களிடம் நான் அகப்படுவேன் என்று செருக்குக் கொள்ளாதீர்கள்" என்கிறார் அப்பர் சுவாமிகள்.

காஞ்சி, திருவானைக்கா, திருவண்ணாமலை, காளத்தி, தில்லை (சிதம்பரம்) முறையே நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய பூதங்களுக்கான தலங்களாகக் கொள்ளப்படுகின்றன. திருவாரூரையும், அங்கு மணலால் ஆன இலிங்கம் இருப்பதால், நிலத்துக்கான கோயிலாகக் கொள்வார்கள். இவை அனைத்தும் பாடல்பெற்ற தலங்கள். இந்தக் கோயில்களை நாம் நம்பிக்கை யோடும் பத்தியோடும் வழிபட்டால் நமக்கும் பஞ்சபூதங்களால் வரும் இன்னல்கள் மறைய; அல்லது குறைய வாய்ப்புண்டு. இந்தக் கோயில்களுக்கு எப்படிப் போவது? எப்படி வழிபடுவது? என்று ஏங்கவேண்டியதில்லை. அந்தந்தக் கோயிலுக்கான பதிகங்களை நம்பிக்கையுடன், நாம் இருக்கும் இடத்திலிருந்தே ஓதினால் நேரில் வழிபட்ட பலன் கிடைக்கும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. வழிபடுவோம்; வழி சமைப்போம்.

க ஜெகதீஸ்வரன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த இதழில்


| | |
|---|---|
| தைப்பூசம் | 03 |
| திருக்கோயில் வழிபாட்டில் திருமுறைகள் | 07 |
| தகுதியற்ற செயல் எந்நோக்கில்....... கந்தபுராணச் சிந்தனைகள் | 11 |
| வழிகாட்டி | 13 |
| உடுப்பி - பயணக் கட்டுரை | 17 |
| திருக்குறள் கதைகள் | 27 |
| Saiva School of Hinduism | 29 |
| சிவராத்திரி விரதம் | 33 |
| பாஞ்சாலி சபதம் | 37 |
| பஞ்சபூதத் தலங்கள் - பதிகங்கள் | 41 |
| சக்தி | 43 |


**அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்**

**கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தைப்பூசம்

தமிழர்களின் பண்பாட்டு மரபுகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குவது, திருவிழாக்கள் ஆகும். இதில் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என ஐவகை நிலத்தின் அடிப்படையில், பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே, நில அமைப்பின் சிறப்பைத் தமிழர்கள் வரையறுத் துள்ளனர். அதற்கு ஏற்றபடி தமிழர்களும் வாழ்ந்தனர். அதுபோல, மக்கள் தங்கள் தேவைகளுக்கு ஏற்ப விழாக்களையும் கொண்டாடி வந்தனர் என்பது வரலாறு.

பழங்காலத்தில் பெரும்பாலான விழாக்கள், முழு நிலவு எனும் பௌர்ணமி நாளை வைத்தே கொண்டாடப்பட்டன.

பனையபுரம் அதியமான்
ஆன்மிக எழுத்தாளர்

“மழைக்கால் நீங்கிய மாசு விசும்பின்,
குறுமுயல் மறுநிறம் கிளற மதி நிறைந்து,
அறுமீன் சேரும் நடுநாள்,
மறுகு விளக்கு றுத்து மாலை தூக்கிப்,
பழவிறல் மூதூர் பலருடன் துவன்றிய,
விழவுஉடன் அயர .... ” என வரும் பாடலில்,

வளர்பிறை, முழுமதி நாள்களில் விழாக்கள் தொடங்கியதை அகநானூறுப் பாடல் கூறுகின்றது. திருஞானசம்பந்தர் தமது மயிலாப்பூர், திருவிடைமருதூர்ப் பதிகங்களில் தைப்பூச விழா பற்றி குறிப்பிட்டுள்ளது இவ்விழாவின் தொன்மையை உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

“மைப்பூசும் ஒண்கண் மடநல்லார் மாமயிலைக்,
கைப்பூசு நீற்றான் கபாலீச் சரம்அமர்ந்தான்,
நெய்ப்பூசு மொண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்,
தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்”

- மயிலைத் தேவாரம்.

திருஞான சம்பந்தர் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு கருத்து. அந்த வகையிலே ஏழாம் நூற்றாண்டிலேயே தைப்பூசம் வெகு சிறப்பாக தமிழர்களிடையே கொண்டாடப்பட்டதை இந்தப் பாடல் வரிகள் உறுதி செய்கின்றன. மேலும், இத்திருவிழா தைமாதப் பௌர்ணமியில் கொண்டாடப்படுவதும் நினைவு கூரத்தக்கது.

இது போலத் திருவிடைமருதூர் தேவாரத்தில்,

“வருந்திய மாதவத்தோர் வானோர் ஏனோர் வந்தீண்டிப்,
பொருந்திய தைப்பூசம் ஆடி உலகம் பொலிவெய்தத்,
திருந்திய நான்மறையோர் சீரால் ஏத்த இடைமருதில்,
பொருந்திய கோயிலே கோயிலாகப் புக்கீரே”,

என்கிறார் திருஞான சம்பந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பொருள்:

பெருமானே! நீர், விரதங்களால் மெய்வருந்திய மாதவத்தோர் வானவர் ஏனோர் வந்து கூடித் தைப்பூச நாளில் காவிரியில் பொருந்தி நீராடி உலகவரோடு தாமும் மகிழுமாறும் திருத்தமான நான்மறைவல்ல அந்தணர்கள் முறையால் ஏத்தவும் இடைமருதில் பொருந்தியுள்ள கோயிலையே இருப்பிடமாகக் கொண்டுள்ளீர்.

சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கொண்டாடப்பட்ட தைப்பூசத்துக்குத் தமிழகக் கோயிலில் நான்கு நாள்கள் கூத்து நிகழ்த்தப்பட்டதைத் தெரிவிக்கும் கல்வெட்டு ஒன்று, திருவிடைமருதூர் அருள்மிகு மகாலிங்கசாமி கோயிலில் காணப்படுகிறது.

தைப்பூசம்:
தைப்பூசம் என்பது தமிழ் மாதமான தை மாதத்தில் வரும் பௌர்ணமித் திதியுடன், முழு நிலவன்று, பூசம் நட்சத்திரத்தில் வரும் திருவிழாவாகும். இவ்வாண்டுக்கான தைப்பூசம் 2025ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை அன்று நடைபெறுகிறது.

தைப்பூச வரலாறு :
தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே ஏற்பட்ட போரில், தேவர்களால் அசுரர்களை அழிக்க முடியவில்லை. அதனால் அவர்கள் பல்வேறு இன்னல்களை அநுபவிக்கவேண்டி இருந்தது. இதனால் தேவர்கள் அனைவரும் சிவபெருமானிடம் முறையிட்டனர். அவர்களின் கோரிக்கையை ஏற்ற சிவபெருமான், தன்னுடைய நெற்றிக்கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளை வெளியிட்டார். அவை ஆறு அழகான குழந்தைகளாக மாறின. கார்த்திகைப் பெண்களால் அக்குழந்தைகள் வளர்க்கப்பட்டு பின்னர் ஒன்றாகி, ஆறுமுகங்களுடன் கூடிய முருகப்பெருமான் அவதரித்தார். இந்தப் பழனி ஆண்டவருக்கு அன்னை பார்வதி ஞானவேல் வழங்கிய நன்னாளே தைப்பூசம் ஆகும்.

இந்த வேலைக் கொண்டு அசுரர்களைத் திருச்செந்தூரில் வதம் செய்து தேவர்களைக் காத்தருளினார் எனப் புராணம் கூறுகிறது. அந்த வகையிலே வேலைப் பூஜிப்பவர்களுக்கு எந்தத் தீய சக்திகளும் தாக்காமல் இருப்பதும், நல்லருளை வழங்கும் என்பதும் முருகன் அடியார்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாக உள்ளது.

இது போல, தனக்குக் கிடைக்க வேண்டிய ஞானப்பழம் கிடைக்காமல் கோபித்துக் கொண்டு கயிலாயத்தில் இருந்து பழநி மலையில் முருகப்பெருமான் குடியேறிய நாளே தைப்பூசம் திருவிழா என்றும் கூறப்படுகின்றது.

தைப்பூசத்திற்கான பிற காரணங்கள்:
தமிழ்க்கடவுளான முருகப்பெருமான் தேவர்களின் சேனாதிபதி என்பதால் இவர் ஒரு போர்க்கடவுள் ஆவார். தைப்பூசத்தன்று தாருகாசுரனை முருகன் வதம் செய்த நிகழ்வே விழாவாகப் பழனியில் கடைப்பிடிக்கப்படுகின்றது.

சிவபெருமான் உமாதேவியுடன் இருந்து சிதம்பரத்தில் ஆனந்த நடனம் ஆடி, தரிசனம் அளித்த நாளைத் தைப்பூசம் என்று கூறுவர்.

தேவர்களின் குருவாகிய பிரகஸ்பதியின் நட்சத்திரம் பூசம் என்பதால் தைப்பூசத்தன்று குரு வழிபாடு செய்வது மிகுந்த பலனைத் தரும் என்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பூச விழா:
தைப்பூசத்தன்று அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு முருகனை வழிபடுவர். தைப்பூசத்தன்று காவடி எடுத்தல், பால் குடம் தூக்குதல் போன்ற நிகழ்வுக்குப் பிறகு கோயிலில் அன்னதானம் வழங்கப்படும். அனைத்து முருகன் கோயில்களிலும் அன்று சிறப்புப் பூஜைகள் நடைபெறும்.

தைப்பூச விழா தமிழ்நாட்டில், முருகப்பெருமானின் அறுபடை வீடுகளிலும் அனைத்து முருகன் ஆலயங்களிலும் வெகு சிறப்பாக கொண்டாடப்படுகிறது. அதுபோல, சிவாலயங்களிலும் தைப்பூச விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. பல்வேறு ஆலயங்களில் தெப்பத் திருவிழாக்கள் நடைபெறும்.

சேர நாடான கேரளாவில், இத்திருவிழாவை, ”தைப்பூயம் ” என்று அழைக்கின்றனர். இம்மாநிலத்தில் புகழ்பெற்ற ஹரிப்பாடு முருகன் கோயிலில் தைப்பூச விழா வெகு சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.

காவடி வகைகள்:
சர்க்கரைக் காவடி, தீர்த்தக்காவடி, பறவைக் காவடி, பால் காவடி, மச்சக்காவடி, மயில் காவடி என பல்வேறு வகையான காவடிகளை தங்கள் வேண்டுதல்களுக்கு ஏற்ப அடியார்கள் எடுக்கின்றனர். குறிப்பாக, பழனி ஆண்டவருக்குத் தென் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்தும் நடைப்பயணமாக ஏராளமான முருகன் அடியார்கள் காவடி எடுத்து, காவடிச் சிந்து பாடி மகிழ்வார்கள். கழுகுமலை முருகன் மீது அண்ணாமலை ரெட்டியார் இயற்றிய காவடிச்சிந்து புகழ்பெற்றதாகும்.

வடலூரில் தைப்பூசம் :
முருகன் ஆலயங்களைப் போலவே வடலூரில் வெகு சிறப்பாகத் தைப்பூச விழா கொண்டாடப்படுகிறது. தமிழ்நாடு மாநிலம், கடலூர் மாவட்டம் வடலூரில், தைப்பூசத்தன்று சத்தியஞான சபையில் அதிகாலை ஏழு திரைகள் நீக்கி முழுமையான ஜோதி தரிசனம் காட்டப்படுகின்றது. வடலூரில் நடைபெறும் தைப்பூச ஜோதி தரிசன விழா முதன்மையானது. வடலூரில் ஆண்டுதோறும் தைப்பூசம் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. உலகமெங்கும் வாழும் சமரச சுத்த சன்மார்க்க பக்தர்கள் வடலூருக்கு பல இலட்சக்கணக்கானோர் வருகை புரிந்து தரிசனம் செய்வார்கள்.

வைணவத் திருக்கோயிலில் தைப்பூச விழா:
தைப்பூசம் என்பது பெரும்பாலும் சைவ ஆலயங்களிலே கொண்டாடப்படும் விழா ஆகும். என்றாலும் தஞ்சாவூர் மாவட்டம், திருச்சேறை என்ற திவ்ய தேசத்திலே அருள்மிகு சாரநாதப் பெருமாள் ஆலயத்தில் அன்று தேர்த் திருவிழா கொண்டாடப்படுகின்றது.

திருச்சிராப்பள்ளியை அடுத்த ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதப்பெருமாள் தம் தங்கையான சமய புரத்தம்மனுக்குக் காவிரிக்கரையில் சீர்வரிசை அளிப்பார்.

உலகம் தழுவிய திருவிழா :
தமிழர்கள் கொண்டாடும் தைப்பூசத் திருவிழா, இந்தியா மட்டுமின்றி, ஸ்ரீலங்கா, தென்கிழக்கு ஆசியாவில் இந்தோனேசியா, மலேசியா, சிங்கப்பூர் வாழ் தமிழர்களால் கொண்டாடப்படுகின்றது. இது தவிர ஃபிஜி, மொரிஷியஸ், சீஷெல்ஸ், தென்னாப்பிரிக்கா, கனடா, டிரினிடாட் - டொபாகோ, கயானா உள்ளிட்ட கரிபியன் நாடுகளிலும், புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு பொது விடுமுறை விழா:
தைப்பூசத்தின் முக்கியத்துவம் கருதி, இந்தியாவில் தமிழ்நாட்டிலும், அயல்நாடுகளான மொரிஷியஸிசிலும், மலேசியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களிலும் அரசு பொது விடுமுறையாக விடப்படுவது, தைப்பூசத்தின் பெருமையைப் பறைசாற்றுவதாக அமைந்துள்ளது.

சில அயல்நாடுகளில் தைப்பூசம்:
ஸ்ரீலங்காவில் குறிப்பாக யாழ்ப்பாண மக்கள் தைப்பூசத்தில் புதிர் எடுப்பார்கள். முருகனுக்கு உரிய சிறப்பான தினமாகக் தைப்பூசம் கொண்டாடப்படுகின்றது.

மலேசியாவில் தைப்பூசம் :
மலேசியா நாட்டின் தலைநகரான கோலாலம்பூரிலிருந்து 13 கி.மீ. தொலைவிலுள்ள பத்துமலை முருகன் கோயில் உலகத் தமிழர்களிடையே புகழ் பெற்ற ஆலயமாகும். தைப்பூசத்தன்று இலட்சக்கணக்கான பக்தர்கள் மலேசியா பத்துமலையில் குவிகின்றனர். இது தவிர, பினாங்கு தண்ணீர்மலை முருகன், ஈப்போ நகர் கல்லுமலை முருகன் ஆலயங்களிலும் தைப்பூசம் வெகு விமர்சையாக நடைபெறும்.

சிங்கப்பூரில் தைப்பூசத்தன்று முருகன் வெள்ளித் தேரில் லயன் சித்தி விநாயகர் கோயில் வரை சென்று, மாலை திரும்பவும் முருகன் கோயிலை வந்தடையும். பக்தர்கள் அலகு குத்தியும், காவடி எடுத்தும் நேர்த்திக் கடன் நிறைவேற்றுவார்கள். சீனர்களும் பயபக்தியுடன் பங்கேற்பார்கள்.

மொரீஷியஸ் நாட்டில் சுப்பிரமணியருக்கு தைப்பூசத் திருவிழா கொண்டாடுகின்றனர். இதில் காவடி எடுத்தல், அலகு குத்துதல் மேற்கொள்ளப்படுகிறது. இதேபோல ரீ யூனியன் நாட்டிலும் தைப்பூசம் மிகச்சிறப்பாக நடைபெறுகிறது.

தென் ஆப்பிரிக்காவில் டர்பன் நகரம், கேப் டவுன் ஆகிய நகரங்களில் கொண்டாடப்படுகின்றது. ஃபிஜியில் நாடி என்னும் இடத்தில் அமைந்துள்ள சிவசுப்பிரமணிய கோயிலில் தைப்பூச விழா கொண்டாடப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் விக்டோரியாவில் உள்ள சிவா - விஷ்ணு கோயிலில் தைப்பூச விழா கொண்டாடப்படுகிறது.

இங்கிலாந்து நாட்டில், இலண்டன் சர்ச் ரோடு பகுதியில் அமைந்துள்ள முருகன் கோயிலுக்கு அதன் சுற்றுப்பகுதிகளில் வசிக்கும் ஏராளமான தமிழர்கள் ஒன்று திரண்டு வந்து விழாவில் பங்கேற்பார்கள். தமிழ்நாட்டில் நடப்பது போலவே பால் காவடி, பன்னீர் காவடி, புஷ்பக் காவடி என பல்வேறு விதமான காவடிகளைச் சுமந்து முருக பெருமானின் திருவடியில் சமர்ப்பிப்பார்கள். பெண்கள், குழந்தைகள், முதியோர் எனப் பலரும் பால் குடம் சுமந்து ஊர்வலமாக வலம் வந்து முருகப் பெருமானுக்கு பாலாபிஷேகம் செய்வார்கள். சிலர் அலகு குத்தி, காவடி சுமந்து, காவடியாட்டம் ஆடுவார்கள்.

பழந்தமிழர்களின் பண்டிகையான தைப்பூசத் திருவிழாவை நாம் கொண்டாடுவோம் அதன் மூலம் முருகப்பெருமானின் அருளைப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில் வழிபாட்டில் திருமுறைகள்

திரு மு க மாசிலாமணி

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சங்ககாலத்தின் இறுதியில் கி.பி. 3ஆம் நூற்றாண்டின் பின் தமிழகத்தில் மூவேந்தராட்சி முடிவுக்கு வந்தததைத் தொடர்ந்து சமண, பௌத்த மதத்தினரான களப்பிரரின் ஆளுகைக்குள் தமிழகம் உட்பட்டதனால் அங்கு சமண பௌத்த மதங்களின் செல்வாக்கே மேலோங்கியது. வேற்றுச் சமயச் சூழல் வலுவாக நிலை பெற்றிருந்த இக்காலத்தில் தோன்றிய சமண நூலான சிலப்பதிகாரம், பௌத்த நூலான மணிமேகலை ஆகிய நூல்கள் அந்நிய மத நூல்களாயிருந்தும் அக்காலத்தில் சைவமும் சிவவழிபாடும் பெற்றிருந்த சிறப்புப்பற்றிப் பாடியுள்ளமை நோக்கத்தக்கது.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்"
"நுதல்விழி நாட்டத்திறையோன் முதலா..."

என மணிமேகலையும் அந்நூல்கள் தோன்றிய காலத்தில் சிவன், திருமால், கொற்றவை ஆகிய தெய்வங்களுக்கான கோயில்கள் இருந்தமை - தெய்வங்களின் வரிசையில் சிவனே முதன்மைத் தெய்வமாகச் சிறப்புப் பெற்றிருந்தமை, கௌரி, சூலி, நீலி சமரி, மாலின் தங்கை என ஆதிபராசக்தியின் ஆயிரம் நாமங்களை எடுத்தோதும் -ஸ்ரீலலிதா சகஸ்ர நாமம் குறிப்பிடும் நாமங்களில் சிலவற்றைத் தமிழாக்கி நாமாவளியாகச் சொல்லிச் சக்தி வழிபாட்டின் சிறப்பைப் போற்றியமை எனச் சமண நூலான சிலப்பதிகாரம் விவரிப்பனவற்றை நோக்கும் போது, சைவத்திற்கெதிரான கெடுபிடிகளைச் சமணம் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்துவிட்ட பாதகமான வேற்றுச் சமயச் சூழலிலும் சைவமும் அது சார்ந்த கோயில்கள், கோயில்களில் விழாக்கள், விழாக்களின் போது பாடல், ஆடல் நிகழ்வுகள் என எல்லாம் சிறப்பாக நிகழ்ந்து வந்தன என்பதனை விளங்கிக்கொள்ள முடிகின்றது.

சமண பௌத்த மதங்கள் வைதீக சமயங்களுக் கெதிராகத் தொடர்ச்சியாக மேற்கொண்ட அழிப்பு நடவடிக்கைகளினால் ஏற்பட்ட பாதகமான சூழ்நிலையிலும் திருமூலர், பரணர், கபிலர், ஐயடிகள் காடவர்கோன், காரைக்காலம்மையார் ஆகிய நாயன்மார்கள், இறை புகழ் பாடும் பனுவல்களை இயற்றிச் சைவத்தை வளர்த்தனர். தமிழாகமம் எனப் போற்றப்படும் பத்தாந் திருமுறையான திருமந்திரத்தை அருளிய திருமூலர், அது தமிழில் இருப்பதால், அது மந்திரமல்ல என யாரும் வாதிடக் கூடாதென்பதற்காகவே திருமந்திரத்தின் இறுதிப் பாடலில்,

"மூலன் உரை செய்த மூவாயிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்"

எனத் தான் இயற்றியது "தமிழ் மந்திரம்" என்று பிரகடனப்படுத்தியுள்ளதுடன், இதனைத் தெளிவு படுத்தும் வகையில் -

"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறை பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந்தானே "

எனத் தான் அருளியவை - தமிழ் மந்திரங்கள் இறைவன் அருள் செய்யத் செய்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்காகவன்று, எல்லோரும் இன்புறுவதற்கே என அழுத்தம் திருத்தமாகப் பிரகடனப்படுத்திய திருமூலரின் ஆன்மநேயம் ஆருயிர்கள் அனைத்திடமும் வைத்துள்ள பேரன்பு, பெரும் பக்தி திருமூலரை அருட்கவியாக, ஞானியாக விளங்க வைக்கின்றது.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"

என்று தன் பிறப்பின் காரணத்தையும், படைப்பின் நோக்கத்தையும் பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியவர் திருமூலர். இறந்த இடையனின் பசுக்களின் துன்பத்தை நீக்குவதற்காக, அந்த இடையனான மூலனின் உடலில் புகுவதற்காகத் தனது சொந்த உடலை மறைத்து வைத்திருந்த இடத்தில் தேடிய பொழுது, தனது உடல் அங்கில்லாமையைக் கண்டு, ஆகமப் பொருளைத் தமிழில் பாடவேண்டும் என்பதற்காக, இறைவனே தனது சொந்த உடலை மறைத்துவிட்டார் என்பதனை உணர்ந்து திருவாவடுதுறைக் கோயிலுக்குச் சென்று, அங்குள்ள அரச மரத்தடியில் யோக நிட்டையில் அமர்ந்து ஆண்டுக்கொரு பாடலாக மூவாயிரம் பாடல்களில் ஆகமத்தைத் தமிழில் பாடி சைவத் தமிழுலகிற்கு அளித்தார்.

நமது நாட்டின் அருட்சுரங்கம் - விலை காணா மாணிக்கம் திருமந்திரமே! மூலன் உரைத்த மூவாயிரம் தமிழும் உள்ளனுபவக் கடலில் ஆழ்ந்தெடுத்த ஆணி முத்துக்களாம். திருமந்திரத்தில் அடங்காத வேதப் பொருளில்லை. இதுகாறும் உலகிற்போந்த சமயப் பெரியார் உள்ளம், ஞானிகள் கருத்து, யோகியர் அநுபவம், ஜீவன் முத்தர் இயல்பு, அருட்புலவர் கண்ட தத்துவங்கள், அறிஞர் அறிந்த அறிவு இவையனைத்தும் திருமந்திரத்தில் அடங்கியுள்ளன. வேதம், ஆகமம் ஆகிய இரண்டுக்கும் திருமந்திரம் அரிய விளக்கமாகப் பொலிகிறது. நமது நாட்டின் தொல்பெருஞ் சமயமான சைவ சித்தாந்தத்தை இந்நூல் விரிவாக விளக்குகின்றது. திருக்குறளைப் போலவே இந்நூலும் முப்பொருளை விளக்கி, அப்பொருளால் கூட்டோடு வீட்டின்பம் பெறும் மானுட வாழ்வை, அமர வாழ்வாக்க வழி காட்டுகிறது. "நமசிவாய" என்று ஆண்டவனை அடைந்து, அவனன்பிற்கே ஊனாகி அவனருளால் எங்கும் "சிவமயம்" கண்டு, அவனறிவு முற்றி, சிவோஹம் பாவனையில் இரண்டறக் கலக்கும் பூர்ணயோக இரகசியத்தை இந்நூல் விரிவாக - அழகாக - விளக்குகின்றது எனக் குறிப்பிடும் "திருமந்திர விருந்து" என்ற நூல், தொடர்ந்தும் -

"நாடும் நகரமும் நின்றிருக் கோயிலும்
தேடித்திரிந்து சிவ பெருமானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்த பின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே" - *1431*

நாடு, நகர், திருக்கோயில் எனத் தேடித் திரிந்து "ஆலயந் தானும் அரனெனத் தொழுமே" என்றவாறு அங்கங்கே சிவன் வீற்றிருக்கிறானென்று பாடுங்கள், பாடிப் பணிமின்கள் இடையீறின்றி அவ்வாறு பணிந்த இறை சிந்தையுள்ள நெஞ்சத்தை இறைவன் தனது திருக் கோயிலாகக் கொள்வான். எனக் கோயில் வழிபாட்டையும், வழிபாட்டில் பாடி வழிபடுதலின் சிறப்பையும் குறிப்பிட்டுள்ள திருமூலர் மற்றொரு பாடலில்,

"வேட்டு அவி உண்ணும் விரிசடை நந்திக்கு
காட்டு அவி நாம் இலம் காலையும் மாலையும்
ஊட்டு அவி ஆவன உள்ளம் குளிர்விக்கும்
பாட்டு அவி காட்டுதும் பால் அவி ஆமே" - *1805*

எனச் சிவனுக்கு நிவேதனமாகும் வேள்வித் தீயிலிடும் அவிப் பொருள்கள் போல எம்மால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவேதிக்க முடியாதாதலால் சிவப் பரம்பொருளின் மனதைக் குளிர்விக்கும் பாட்டு அவியாகிய பாடலுணவைக் காலையும் மாலையும் நிவேதனமாகப் படைப்போம் என இறைபுகழுரைக்கும் தோத்திர வழிபாட்டின் சிறப்பை விதந்து போற்றுவர். தொடர்ந்தும், தமிழ் ஞானமாகிய திருமறையை உபதேசித்தருள அலைந்து திரியும் சித்தர்கள் அத் தமிழ்மறை தரணிக்கெல்லாம் பரவ அருளுரை செய்தவர்களென,

"தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவர்
அவிழும் மனமும் ஓம் ஆதி அறிவும்
தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவ ஞானமே" - *1630*

எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

"தமிழகத்தில், அறிவு மிக்கவராய் நீரை வாயிலிருந்து கொட்டுவது போல மிக எளிதாகப் பாடல்களைப் பாடிக் கொண்டு நாடு சுற்றும் அறிஞர்களைத் திருமூலர் குறிப்பிட்டுள்ளார். இதனால் அவர் காலத்தில் சிவனடியார் சிலரேனும் பாசுரங்களைப் பாடிக் கொண்டு தலயாத்திரை செய்து வந்தனர் என்பது பெறப்படும்" எனச் சைவசமய வளர்ச்சி - பக்கம் - 90 என்ற நூலில் - அதன் ஆசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனார் குறிப்பிடுவதனையும் நோக்கத் திருமூலர் காலத்திற்கு முன்னரே தமிழகக் கோயில்களில் மூவர் முதலிகள் தங்கள் தேவாரங்களில் குறிப்பிட்டுள்ளது போலப் பக்திமைப் பாடல்கள் பாடப்பட்டு வந்துள்ளன என அறியமுடிகின்றது.

திருமூலரைப் போலவே 11ஆம் திருமுறை ஆசிரியர்களான கபிலர், பரணர், ஐயடிகள் காடவர்கோன், காரைக்காலம்மையார் ஆகியோரும் சிவன் புகழ் பாடும் அருட்பாசுரங்களைப் பாடியுள்ளதுடன் தங்கள் பாடல்களை ஓதுவதனால் அடையக் கூடிய பயனைக் குறிப்பிட்டும் பாடியுள்ளனராகையால் பயன் கருதி அவர்கள் பாடல்களும் மூவர் முதலிகளுக்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழகக் கோயில்களில் ஓதப்பட்டிருக்கலாம். தமிழ் மக்கள் தம் இறை வழிபாட்டில் முதன்மை கொடுத்து வழிபடப்படுபவரும் சங்க நூல்களில் குறிப்பிடப்படாதவருமான விநாயகரைப்பற்றி 20 செய்யுள்களில் கபிலர் பாடியுள்ள "மூத்த நயினார் திருவிரட்டை மணிமாலை" என்ற நூல் 11 ஆம் திருமுறையிலுள்ள ஒரு பிரபந்தமாகும். இவர் தான் பாடிய "சிவபெருமான் திருவந்தாதி" என்ற அந்த நூலில்,

"நூறான் பயன்ஆட்டி நூறு மலர்சொரிந்து
நூறா நொடிஅதனின் மிக்கதே - நூறா
உடையான் பரித்தளரி உத்தமனை வெள்ளேறு
உடையானைப் பாடலால் ஒன்று"

என நூறு பசுவின் பாலை, திருமுடிக்குச் சொரிந்து நூறு மலரால் அர்ச்சனை செய்தலைக் காட்டிலும் அச்சிவன் மீது ஒரு பாடல் பாடி வணங்குவதே மிகச் சிறந்ததெனத் தோத்திர வழிபாட்டின் சிறப்பை விதந்து போற்றியுள்ளார்.

சிவனிடம் பேரன்பு கொண்டவரும் திருமுறை ஆசிரியர்களில் ஒரேயொரு பெண்பாற் புலவரும், சிவனின் புகழ்பாடும் கவிதை மரபிற்கு ஏனைய திருமுறை ஆசிரியர்களுக்கு முன்னோடியாக விளங்குபவருமான காரைக்காலம்மையார், திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள், திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திருவந்தாதி ஆகிய பக்திப் பனுவல்களைப் பாடியவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரும் முன்னையவர்களைப் போல்,

“காரைக்காற் பேய் செப்பிய செந்தமிழ் பத்தும்
வல்லார் சிவகதி சேர்ந்தின்பம் எய்துவரே”

எனத் தனது பாசுரங்களைப் பாடுபவர்கள் பெரும் பயன் பற்றிக் கூறி, பிற்காலத்தில் சம்பந்தர், சுந்தரர் ஆகிய தேவார ஆசிரியர்களுக்குத் திருக்கடைக்காப்புச் செய்யுள் பாடும் நடைமுறைக்கு முன்னோடியாக அமையும் இவரின் பாடல்களும் பயன் கருதித் தேவார ஆசிரியர் மூவர் முதலிகளுக்கு முன்னரே தமிழகக் கோயில்களில் ஓதப்பட்டிருக்கலாம்.

11 ஆம் திருமுறை ஆசிரியர்களில் ஒருவரான ஐயடிகள் காடவர்கோன் பாடிய சேத்திர வெண்பா இறக்குந் தறுவாயில் துன்பங்கள் நேருமுன் இன்ன தலத்து இறைவனை நினைந்து வணங்கு என நெஞ்சிற்கு அறிவுறுத்துவனவாகவுள்ள இச்சிறு நூலில் 24 தலங்களுக்கு, தலத்துக்கு ஒரு செய்யுளாக 24 செய்யுள்கள் பாடப்பட்டுள்ளன. இந்நூலின் முதல் வெண்பா தில்லையைப் பற்றிப் பாடுவதனால் சைவர்களுக்குக் கோயில் என்று கூறினால், அது தில்லைச் சிதம்பரம் கோயிலையே குறிக்குமளவிற்குச் சிறப்புப் பெற்ற இத்திருக்கோயில் தமிழகத்திலுள்ள ஏனைய கோயில்கள் முதன்மைச் சிறப்புப் பெறுவதற்கு முன்னரே திருநடனம் ஆடும் கூத்தப் பெருமான் கோயில் கொண்ட முதற் கோயிலாதலால், சைவ உலகில் மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே சிறப்பு மிக்க முதன்மைக் கோயிலாக முக்கியம் பெற்று விளங்கி வருகின்றது.

இவ்வாறு, காரைக்காலம்மையார், கபிலர், பரணர், ஐயடிகள் காடவர்கோன் ஆகிய அருளாளர்கள் தமது பாடல்களில் எழுபது வரையான கோயில்கள் பற்றிப் பாடியுள்ளனராகையால் அவர்கள் பாடிய அக்கோயில்களுக்குத் தல யாத்திரையாகச் சென்று இறை புகழ் பாடும் இந்த மரபினையே அவர்களுக்குப் பின்வந்த அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரும் தமிழகம் பூராவுமுள்ள திருக்கோயில்களுக்குத் தல யாத்திரையாகச் சென்று, இறை புகழ் விரித்துரைக்கும் அருட்பாசுரங்களைப் பல்லாயிரக்கணக்கில் அருளித் தமிழைப் பக்திக்குரிய மொழியாக உயர்த்தினர். தேவார ஆசிரியர்கள் மூவரும் தங்கள் தேவாரங்களில் பலவிடங்களில் தங்களுக்கு முன்னரே தமிழகக் கோயில்களில் இறை புகழ் போற்றும் பக்திப் பாசுரங்கள் ஓதப்பட்டு வந்துள்ளன என்பதனையே மேலே குறிப்பிடப்பட்ட விவரங்கள் தெளிவாக விளக்குகின்றன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகுதியற்ற செயல் எந்நோக்கில் யார் செய்தாலும் பழியுண்டு

கந்தபுராணச் சிந்தனைகள்

Dr ச சிவலோகநாதன்

"....புல்லை யுண்கென வாளரிச் சேயினைப்
போக்கல் போலவும் ஊன்விலை வாணிகம்
நல்ல தென்றொரு பார்ப்பனப் பிள்ளையை
நாடு விப்பது போலவும்.. "

புல்லை உண்ணுமாறு ஒரு சிங்கக்குட்டியை ஊக்குவிப்பது போலவும், இறைச்சி வியாபாரம் நல்லதொரு தொழில் என்று ஒரு பிராமணப் பிள்ளையை அத்தொழிலைச் செய்ய ஏவுதல்போலவும் என்று சில தகுதியற்ற செயல்கள்பற்றிப் பாரதியார் கூறியுள்ளார். இதேபோல இன்னும் பல தகுதியற்ற செயல்கள் வாழ்க்கையிலே இருக்கின்றன. மாறிக்கொண்டே இருக்கும் உலகில் இவ்வாறான தகுதியற்ற செயல்களைச் செய்யாவிட்டால் சில வேளைகளில் உலக வாழ்க்கையில் முன்னேற முடியாது என்றவொரு நிலை ஏற்படுகிறது. அவ்வாறான குழப்பமான நிலைகளில் மனம் தளராமல் இருக்க, "தகுதியற்ற செயல் எந்நோக்கில் யார் செய்தாலும் பழியுண்டு" என்று கந்தபுராணம் சொல்லாநிற்கின்றது.

சூரனின் தங்கையான அசமுகி துர்வாச முனிவரை வலுக்கட்டாயமாகக் கூடுகிறாள். அவளுக்கு வில்லவன், வாதாவி என்ற இரு புதல்வர்கள் தோன்றுகிறார்கள். அவர்களைத் தவம் செய்து வலிமை பெறுமாறு ஏவுகிறாள் தாயான அசமுகி. அவர்கள் தந்தையிடம் அவருடைய தவ வலிமையைத் தருமாறு கேட்கிறார்கள். அவர் மறுக்க, அவர்கள் அவரைக் கொலை செய்யப் போகிறார்கள். தம்மைக் கொல்ல வருகின்ற சிறுவரைப் பார்த்து, "நீங்கள் குற்றமற்ற முனிவருக்கே நாள்தோறும் துன்பம் செய்வீர்கள் ஆகுக. சில நாள்களுக்குப் பின் அகத்திய முனிவர் உங்கள் உயிரைக் கவர வருக" என்று சாபமிட்டு அங்கிருந்து மறைந்தார். சகோதரர்கள் இருவரும் பிரமனை நோக்கிக் கடுந்தவம் செய்தனர். பிரமன் தோன்றவில்லை. தாயின் ஆட்டுருவைக் கொண்ட வாதாவி வேள்வித் தீயிலே அவியாகி இறந்தான். வில்வலனும் தீயிற் குதிக்க முயல்கையில் பிரமன் தோன்றினார். அவர் வில்வலனிடம் வேண்டும் வரம் யாதெனக் கேட்டார். "வேள்வித் தீயில் இடும் அவியுணவாக இறந்துவிட்ட என் தம்பி உடலின் நிறைந்த உறுப்புக்களுடன் விரைந்து உயிர்பெற்று வரவேண்டும்" என்று வில்வலன் கேட்டான். பிரம்மதேவரும், "வாதாவியே! எழுவாய்" என்று அழைக்க வாதாவி எழுந்தான். இதைக் கண்ட வில்வலன் பிரம்மதேவரிடம், "சுவாமி! எனக்கு இன்னொரு வரம் தரல்வேண்டும். புல்லை மேய்கின்ற ஆட்டுக்கடாவைப் போன்ற வடிவம் கொள்கின்ற வாதாவி இனிவரும் காலத்திலும் விரைவில் உடல் வெட்டப்படுமானால் அளவில்லாத அன்புடன் நான் 'என் தம்பியே எழுக!' என்று சொன்னவுடன் பழைய வடிவத்துடன் என்முன்னே வரவேண்டும். இதுவே நான் கேட்கும் வரம்" என வில்வலன் கூறினான். அங்ஙனமே பலகாலம் நிகழ்வதாக என்று கூறிப் பிரம்மன் மறைந்தார்.

இதன்பிறகு வில்வலனும் வாதாவியும் ஓர் ஆசிரமத்தை அமைத்துக்கொண்டு வில்வலன் ஒரு முனிவர் வேடமும் வாதாவி ஒரு முறுகிய ஆட்டுக்கடா உருவமும் கொண்டிருந்தனர். அவ்வழியே வருகின்ற முனிவர்களை வில்வலன் சென்று வணங்குவான். தன்னுடைய ஆசிரமத்துக்கு வரும்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தி அழைப்பான். ஆசிரமத்துக்கு வந்த முனிவர்களுக்குச் சகல உபசாரமும் செய்து உணவு உண்டு செல்லுமாறு கேட்பான். முனிவரின் சம்மதத்தைப் பெற்றபின் பல கறிகளுடன் வாதாவியாகிய ஆட்டுக்கடாவையும் வெட்டிக் கறி செய்வான்.. வஞ்சனை அறியாத முனிவரும் தம்முன்னிட்ட போனகத்தை அன்போடு உண்பர். முனிவர் உண்டு களையாறும் நேரத்தில் வில்லவன் தம்பியே எழுக என்றழைப்பான். வாதாவி பழையபடி முறுகிய ஆட்டுக்கடாவாகி முனிவரின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவான். முனிவர் இறந்துவிடுவார். பின்பு இருவரும் இறந்துவிட்ட முனிவரின் ஊனை உண்பார்கள்.

இவ்வாறு முனிவர்களை வில்வலனும் வாதாவியும் கொடூரமாகக் கொன்றுவரும் நாளிலே அகத்தியரும் பொதியமலையை நோக்கி வந்துகொண்டிருந்தார். அகத்தியரைக் கண்ட வில்வலன் வழமைபோல் அவரை வணங்கி ஆசிரமத்துக்கு அவரை அழைத்துவந்தான். தம்பியாகிய ஆட்டுக்கடாவைச் சமைத்து உணவு கொடுத்தான். முனிவர் உண்டபின் வில்வலன் "என் தம்பியே எழுக!" என்று அழைத்தான். முனிவரின் வயிற்றில் இருந்த வாதாவி தீமை உண்டாகும் என எண்ணாமல் என்னை உண்ட முனிவரின் வயிற்றைக் கிழித்து வருவேனெனச் சிங்கம்போலக் கர்ச்சித்தான். அகத்தியர் ஞானத்தினால் நடந்ததை உணர்ந்தார். சினங்கொண்டு, "தசைக்கறியாகி உண்ணப்பட்ட வாதாவி என்பவன் உயிரை இழந்து உண்ணப்பட்ட உணவின் தன்மையையே பெற்றுச் சீரணமாகுக" என்று வயிற்றை ஒருமுறை தடவினார். வாதாவி சீரணமாகினான். நிலைமையை உணர்ந்த வில்வலன் கோபங்கொண்டு முனிவரைத் தாக்க வந்தான். முனிவர் தருப்பையைச் சிவப்படைக்கலமாக்கி அவனைக் கொன்றார். பெரிய பாவிகளான வில்வலனும் வாதாவியும் கொல்லப்பட்டனர்.

ஆனால், செய்யப்பட்டது கொலை, செய்தவர் முனிவர். அவரைப் பிரமஹத்தி தோஷம் பிடித்துக்கொண்டது. அது இறந்துவிட்ட வில்வலன், வாதாவி போல் வடிவங்கொண்டு அவரைத் தொடர்ந்தது. அவர்கள் இருவரும் கரிய மேகம்போன்ற வடிவம் உடையவர். சுழல்கின்ற கண்களை உடையவர். உற்சாகம் உடையவர், கடும் சினம் உடையவர். இத்தகைய இயல்புகளுடன் ஆரவாரம் செய்துகொண்டு அவர்கள் அகத்தியரை நெருங்குவர். இருவரும் அகத்தியருக்கு அருகே வருவர். தொலைவில் போவர். முனிவர் கண்ணுக்கு எதிரே வருவர். மறைந்து காண முடியாதவாறு நிற்பர். இவற்றைப் பார்த்த அகத்தியர் தம்மைப் பிரம்ஹத்தி பிடித்ததை உணர்ந்தார்.

நம்மை விட்டு நீங்காத பிரம்மஹத்தி குற்றம் நீங்குமாறு சிவபெருமான் திருவடிகளை இங்கு அருச்சிப்போமென ஒப்பற்ற அகத்தியர் நின்றார்.

பேர்கி லாதஇப் பிரம கத்திநோய்
தீரு மாற்றினால் சிவன தாள்களை
ஆர்வ மோடிவண் அர்ச்சிப் பாமென
நேரில் மாமுனி நினைந்து நின்றரோ

காவிரி நீங்கு படலம் 5

அகத்தியர் பல நாள் சிவபூசை செய்து சிவபெருமானுடைய அருளினால் தம்மைப் பிடித்த பிரம்ஹத்தி நோயைத் தீர்த்துக்கொண்டார். இந்தச் சம்பவத்தின் மூலம் தகுதியற்ற செயலை எந்நோக்கில் யார் செய்தாலும் பழியுண்டு என்று கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரம் சொல்லாநிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிகாட்டி

கிருபாநந்தவாரியார்

எல்லாப் பிறப்பும் இறந்து, பிறந்து, இளைத்து, வேறுவேறு குருமார்கள், வேறுவேறு வழியல்லாத வழிகளைக் காட்ட, நன்னெறி விடுத்துப் புன்னெறி அடுத்துப் பல்லூழி காலமாகப் பரிதவிக்கின்ற ஆன்மாக்களாகிய நமக்கு நல் வழிகாட்டியாக வந்த மாணிக்கவாசக சுவாமிகள் நம் பழவினைகள் பாறும் வண்ணம் அருளிச்செய்த சிவானந்தத் தேன்தான் திருவாசகம்.

மலைப்புறத்தில் வாழுகின்ற மலைவாசி ஒருவன் சென்னையைக் காண விரும்பினான். அவனுடைய நண்பன் ஒருவன் சென்னையில் இருந்தான். அந்த நண்பன் முகவரி:

கனகசபாபதி,
இல 5 வேதகிரி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

இதனை எடுத்துக்கொண்டு மலைவாசி புகைவண்டியில் ஏறி எழும்பூர் நிலையத்தில் இறங்கினான், பெரிய கட்டடத்தையும் மக்கள் திரளையுங்கண்டு மயங்கினான், புகைவண்டி நிலையத்தைவிட்டு வெளியே வந்தான். எறும்பு சாரையிடுவதுபோல் கார்கள் காற்று வேகத்தில் போய்க்கொண்டிருப்பதைக் கண்டு தயங்கினான். “இவர்கள் காரை மெல்ல ஓட்டினால் என்ன? ஏன் இத்தனை வேகமாக ஓட்டுகிறார்கள்?” என்று மனதுக்குள் எண்ணினான்.

மலைவாசியின் மனமயக்கம்:

எழும்பூரிலிருந்து நேர் கிழக்கில் அரைக்கல் தொலைவில் உள்ளது சிந்தாதிரிப்பேட்டை என்பதை அவன் உணரவில்லை. வேகமாக வேலைக்குச் சென்றுகொண்டிருந்த ஒருவரைப் பார்த்து, “ஐயா! வணக்கம். நான் கொல்லிமலைப் பக்கம். என் நண்பரைக் காண வந்தேன். சிந்தாதிரிப்பேட்டைக்கு வழி எப்படி?” என்று வினாவினான்.

“ஓய்! வழி தெரியாமல் ஏன் வந்தாய்? வந்த வழியே போ” என்று அவர் கடிந்து கூறிச்சென்றார்.

மலைவாசி அஞ்சினான். மனம் வருந்தியது. மற்றொருவனைக் கும்பிட்டு, “ஐயா! சிந்தாதிரிப்பேட்டைக்கு வழி யாது?” என்று கேட்டான்.

“ஏனையா! வழிதெரியாமல் வந்தாய்? உங்களுக்கெல்லாம் சென்னையில் என்ன வேலை? சீ! போ” என்றான்.

மற்றும் ஒருவனைப் போய் நடுங்கிய மனத்துடன், “ஐயா! சிந்தாதிரிப்பேட்டை எந்தப்பக்கம் உள்ளது?” என்றான்.

“ஏய்! பட்டிக்காட்டு மட்டிப்பயலே! உனக்கு உதை வேணுமா? உனக்கு வழி சொல்ல எனக்குச் சம்பளம் போட்டு வைத்திருக்கிறாயா? மண்டுகமே! போடா போ” எனக்கூறிச் சீறிவிழுந்தான். மலைவாசி நடுங்கிவிட்டான். உள்ளம் வருந்தினான். “வழி சொன்னால் வாய்முத்தம் சிந்திவிடுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது என்ன பண்பாடு? நான் ஏன் இங்கு வந்தேன்? தெய்வமே!" என்று ஏங்கினான்.

பின்னர் ஒருவனைப் பார்த்து, "ஐயா! நான் கொல்லிமலைப்பக்கம் வசிப்பவன். எனது நண்பர் ஒருவரைக் காண இங்குவந்தேன். சிந்தாதிரிப்பேட்டைக்கு வழி எது? தயவுசெய்து சொல்லுங்களேன்" என்று நயந்து கேட்டான்.

குறும்பன் செயல்

"ஐயா! உன்னைக் கண்டால் நல்ல மனிதனாகத் தோன்றுகிறது. பரிதாபமாகவும் இருக்கின்றது. இங்கே உள்ளவர்கள் உனக்குச் சரியான வழி காட்டமாட்டார்கள். நேரே வடக்கே போ. ஒருத்தர் பேச்சையும் கேளாதே, நேரே கண்ணை மூடிக்கொண்டு எட்டுக்கல் தூரம் போ. அங்கே ஒரு பனங்காடு வரும். அதற்கு அருகில் உளது சிந்தாதிரிப்பேட்டை. பாவம், நல்ல மனிதன். போய் வா" என்று கூறினான்.

நம்பினான் மலைவாசி

மலைவாசி அவன் பொய்யுரையை மெய்யென்று நம்பினான். கிழக்கே அரைக்கல் தொலைவில் இருக்கும் சிந்தாதிரிப்பேட்டையை அறியாமல் வடக்கு நோக்கி விரைந்து நடந்தான். வண்ணாரப்பேட்டையைக் கடந்து தண்டையார்ப்பேட்டையையுந் தாண்டித் திருவொற்றியூரைக் கடந்து சென்றான். அங்கே சவுக்கு மரங்களும் ஈச்ச மரங்களும் அடர்ந்த இடத்தை அடைந்தான். ஊர் இல்லை. அங்குள்ள சிலரை நோக்கி, "இங்கே சிந்தாதிரிப்பேட்டை எங்குளது?" என்று கேட்டான்.

"அட, அப்பாவியே! சிந்தாதிரிப்பேட்டை இங்கே ஏது? நேரே தெற்கே போ. எட்டுக்கல் சென்றால் சிந்தாதிரிப்பேட்டையை அடையலாம். ஒருவர் பேச்சையும் கேட்காதே. நேரே போ" என்றார்கள்.

"என்ன ஐயா! அங்கே ஒருவர் எட்டுக்கல் வடக்கே போ என்றார், நீங்கள் எட்டுக்கல் தெற்கே போ என்கிறீர்கள். எது உண்மையென்று எனக்குப் புரியவில்லை. காலுங் கடுக்கின்றது, வயிறும் பசிக்கின்றது" என்றான்.

"அப்படியா சங்கதி? உன்னை எவனோ ஏமாற்றி வழியல்லாத வழியைக் காட்டி அலையவிட்டான் போலும். இந்த ஊரில் வெகுபேர் இப்படிப் பிறரைத் துன்புறுத்தி இன்புறுகிறார்கள். நீ ஒன்றும் யோசிக்காமல் தெற்கே போ" என்றார்கள்.

மலைவாசி இதைக் கேட்டுப் பெருமூச்சு விட்டான். "ஆண்டவனே! இதுவும் ஒரு திரு விளையாடலா?" என்று கூறித் தென்திசை நோக்கி நடந்தான்.

இங்ஙனம் வழியறியாது இப்படியும் அப்படியுமாக அலைந்தான், மனம் உலைந்தான்; கால் தேய்ந்தது; வயிறு தோய்ந்தது; தலை தீய்ந்தது; பொழுதும் சாய்ந்தது; கண் சுழன்றது. திசையறியாது திகைத்தான். திரும்பவும் புகைவண்டி ஏறித் தன்னூர் போகலாம் எனில், எழும்பூர் எந்தப்பக்கம் என்று அறியாது மயங்கினான். பசி காதடைத்தது. காலை தொடங்கி மாலை வரை அலைந்த அவன், மதி கலங்கி நின்றான்.

கருணைக் கடல்

கந்தசுவாமி கோயிலுக்கு வழிபாட்டுக்குச் செல்லும் ஓர் அன்பர் அவ்வழியே சென்றார். திருநீறும் உருத்திராக்கமும் தரித்து, கருணை நிறைந்த முகத்துடன் செல்லும் அவரை நோக்கி, "ஐயா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணக்கம். நான் மலைவாசி. சிந்தாதிரிப்பேட்டைக்குப் போகவேண்டும். காலையிலிருந்து வழியறியாது அலைகின்றேன். கருணை செய்து வழி சொல்லுங்கள்" என்றான். கிணற்றிலிருந்து பேசுகிறவன் குரல்போல் இருந்தது. வாடி வதங்கி நின்ற அவனைக் கண்ட அன்பர் திருவுள்ளம் இரங்கினார்.

தெய்வம் வழிகாட்டும்

"ஐயா! வருந்தற்க. உனக்குச் சிந்தாதிரிப்பேட்டைக்கு நான் வழி சொல்லமாட்டேன். ஏனெனின் நான் கூறிய வழியே உன்னாற் செல்ல இயலாது. நீ மதி மயங்கி இருக்கின்றாய். நான் ஒரு வழி காட்டினால் நீ ஒருவழி போவாய். அலைந்ததுதான் மிச்சம். நான் உன்னை அழைத்துக்கொண்டு போய்க் குறிப்பிட்ட இடத்தில் உன்னைச் சேர்க்கிறேன். வா. உனக்கு வழி காட்டினால், தெய்வம் எனக்கு வழிகாட்டும். மக்களுக்குச் செய்கின்ற சேவையே தெய்வப் பணி. நான் கந்தசுவாமி கோயிலுக்குச் சென்றுகொண்டிருந்தேன். ஒருமணி நேரம் கழித்துச் சென்று சுவாமி தரிசனை செய்வேன். அதனால் ஒன்றும் குற்றமில்லை. இங்கிருந்து ஒண்ணரைக்கல் தொலைவில் உள்ளது சிந்தாதிரிப்பேட்டை. என்னுடன் வா! நீ போகவேண்டிய இடத்தைச் சொல். அங்கேயே உன்னைச் சேர்க்கிறேன்" என்று அன்பு ஒழுக இன்னுரை பகர்ந்தார்.

மலைவாசியின் மனம் குளிர்ந்தது. "அண்ணா! நீங்கள் எனக்காகச் சிரமப்படக்கூடாதே" என்றான்.

"குற்றமில்லை. வா. ஒருவருக்கொருவர் உபகாரம் புரியவேண்டும். 'பரோபகாரம் இதம் சரீரம்' என்று சாத்திரம் கூறுகின்றது. வா, போகலாம்" என்றார்.

வயிறும் நிறைந்தது, வழியும் புரிந்தது.

மலைவாசியின் கையிலுள்ள சீட்டை வாங்கிப் பார்த்தார். "ஓ! இவர் எனக்குத் தெரிந்தவர்தான்!" என்று கூறி அவனை அழைத்துச் சென்றார். வழியில் ஒரு ஓட்டலில் அவனுக்கு வயிறு நிறைய உணவை வாங்கித் தந்து உண்பித்தார். இனிய உரைகளால் அவன் செவியை நிரப்பினார். அன்பாக அழைத்துச் சென்றார்.

"அப்பா! இதுதான் சிந்தாதிரிப்பேட்டை. இதோ வந்துவிட்டோம். இது வேதகிரி தெரு. இந்த வீடுதான் ஐந்தாம் இலக்க வீடு. அதோ உள்ளே சிவப்பாக, கழுத்தில் சிறிது கறுப்பாகத் தென்திசை நோக்கி அமர்ந்துள்ளாரே! அவர்தான் கனகசபை. இனி நான் வரட்டுமா?" என்று கூறினார்.

நன்றியுணர்வு

மலைவாசி, "நல்லது, போய்வாருங்கள்" என்றா கூறுவான்? அவன் உள்ளத்தில் நன்றியுணர்வு பொங்கி வழிந்தது. கண்ணீர் துளித்தது. அன்பு கனிந்தது.

"கருணை உருவாய அருளாளரே! நான் தங்கட்கு எனது நன்றியை என்ன வார்த்தையால் கூறுவேன்? மொழியேயில்லை. ஆ! ஆ! என்ன கருணை! என்ன பரிவு! எழுமையும் நன்றி பாராட்டக் கடமை பூண்டுள்ளேன். பலகோடி வணக்கம். தருணத்தில் பயன் கருதாது உபசரித்த தங்கட்கு என் உள்ளம் நிறைந்த நன்றி. சென்னி சாய்ந்த வணக்கம். ஒருபோதும் மறவேன். எண்ணிறந்த நன்றி" என்று வாய் குழறிக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவின் வழிகாட்டி

இப்போது அன்பர்கள் கவனியுங்கள். காலை தொடங்கி மாலைவரை அலைந்த ஒருவனுக்கு வழிகாட்டிய அன்பர்க்கு அம் மலைவாசி இத்தனை நன்றி கூறினான்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும்.."



பிறந்து, இறந்து, இறந்து பிறந்து இளைத்து வேறுவேறு குருமார்கள் வேறுவேறு வழியல்லாத வழிகளைக் காட்ட, நன்னெறி விடுத்துப் புன் னெறியடுத்து, பல்லூழி காலமாகப் பரிதவிக்கின்ற ஆன்மாக்களாகிய நமக்கு, வழிகாட்டியாக வந்து, மாணிக்கவாசக சுவாமிகள் பயன் கருதாது பரம கருணையுடன் நல்ல சிந்தைகள் (அத்ரி - மலை) மலைபோல் குவிந்த சிந்தாதிரிப்பேட்டையில், நான்கு வேதங்களாகிய வேதகிரித் தெருவில், பஞ்சாக்கரமாகிய ஐந்தாம் இலக்க வீட்டில், கனகசபையில் நடிக்கின்ற கண்டங்கரியராகிய சிவபெருமான் இதோ பார்! அவனை அடைய வழி இது. நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க! என்று அறிமுகப்படுத்தி, முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயங்காமல், பத்திநெறி அறிவித்துப் பழ வினைகள் பாறும் வண்ணம், சிவமூர்த்தியைக் காட்டி அமுத வாக்காகிய திருவாசகத்தை ஊட்டிய மாணிக்கவாசக சுவாமிகட்கு நாம் என்ன வகையில், எந்த மொழியில் நன்றி கூறுவது? ஒருமுறை, இருமுறை நன்றி கூறினால் போதுமா?

சிவநெறி செல்க

எனவே மாணிக்கவாசகப் பெருமானை மறவாது மனத்தில் இருத்தி அவர் சரண கமலங்களை வணங்குதல் வேண்டும். அவர் நமக்குத் தந்தருளிய திருவாசகத் தமிழ்மறையை இடையறாது வாசிக்கவேணும்; பூசிக்கவேணும்; வாசிப்பவர்களை நேசிக்கவேணும்.

அவநெறி செல்லாது சிவநெறி சென்று உய்ய வேண்டும்.

**நன்றி: திருவாசகத் தேன் 1959**

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தன்எனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே

- அச்சோப்பதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

உடுப்பி என்ற நாமத்தைக் கேட்டாலோ, வாசித்தாலோ அல்லது பார்த்தாலோ வாய் ஊறும். வெகு ருசிகரமான உணவு உடுப்பி உணவு தான் அதற்குக் காரணம். இந்தியாவின் நான்கு திசைகளிலும் பிரயாணம் செய்தோம். உடுப்பியின் உணவுக்கு முன் அவை மிகச் சாதாரணம்.

உடுப்பி கர்நாடக மாநிலத்து ஒரு மாநகரம் ஆகும். கர்நாடகம் முன்பு மைசூர் எனக் குறிக்கப்பட்டு 1973 முதல் கர்நாடகமாக மாறியது. கடலோரத்தில் இருக்கும் உடுப்பி, ஒரு பிரபல யாத்திரை, சுற்றுப்பிரயாணத் தலமாவுள்ளது.

உடப்பி = உடு + பா
உடு = நட்சத்திரம் - சந்திரன்
பா = அதிபதி

நாம் இங்கே பார்க்கப்போவது உடுப்பி உணவகத்தை அன்று. அழகான பாலகிருஷ்ணனாக உடுப்பியிலிருந்து இருந்து அருள்பாலிக்கும் கோயில் பற்றியே!



தட்சனின் சாபத்தால் நிலைகுலைந்த சந்திரன், தனது 27 மனைவிகளுடன் உடுப்பியை அடைந்து, கிருஷ்ணரை வழிபட்டுச் சாபம் நீக்கப்பெற்றான். எனவே இங்கிருக்கும் மூலவர் கிருஷ்ணர் நட்சத்திரங்களுக்குத் தலைவனாகவும், கிரகங்களுக்குத் தலைவனாகவும் பிரகாசிக்கின்றார்.

மூலவர்: பாலகிருஷ்ணர்
தீர்த்தம்: மத்வபுஷ்கரணி

குழந்தை என்றால் யாருக்குத்தான் பிரியம் இல்லை! அன்பு, ஒரு ஈர்ப்பு, காந்தம் போல் ஏற்படாது? இங்கு பாலகிருஷ்ணர் கருநிறமாக, நின்ற நிலையில் வலது கையில் தயிர் கடையும் மத்துடன், இடது கையில் வெண்ணெயுடன் காட்சியளிக்கிறார். குழந்தை கிருஷ்ணர் வடிவில், இவரின் தோற்றமே சிறந்ததாகக் கருதப்படுகிறது.

கிருஷ்ணர் உடுப்பி வந்தடைந்ததற்கும் ஒரு வரலாறு உள்ளது. துவாரகாபுரியில் கிருஷ்ணரின் அன்பு மனைவி ருக்மணி வசித்து வந்தார். தனது கணவரின் குழந்தை வடிவை, அழகைக் காண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசைப்பட்டார். இதை நிவர்த்தி செய்ய, கிருஷ்ணர் விஸ்வகர்மா என்பவரைப் பணித்தார். விஸ்வகர்மா குழந்தை ரூபத்தைச் சாளக்கிரமத்தால் அமைத்தார். அதன் அழகில் மயங்கி, தினமும் ருக்மணி சந்தனமிட்டுப் பூசித்து வந்தார்.

சாளக்கிரமம் கருப்பு கோல் வடிவமான கல். துவாரம் உடையது. துவாரத்தினுள் விஷ்ணுவின் சக்கரத்தைப் போல் கோடுகள் உள்ளன. நேபாளத்தின் கண்டாகி நதியில் இதைக் காணலாம். குருவாயூரப்பன் கிருஷ்ணரும் சாளக்கிரமத்தால் அமைக்கப்பட்டவர்.



துவாரகா கடலில் மூழ்கிய போது, ருக்மணி பூசித்த இச்சிலையும் கடலில் அமிழ்ந்தது. பல ஆயிரம் ஆண்டுகளின் பின், உடுப்பி கடலில் புயலில் ஒரு கப்பல் தத்தளித்தது. கடற்கரையில் நின்ற பழுத்த ஞானி ஆகிய மத்வாசாரியார் தன்மேற் துணியால் சைகை காட்ட, கப்பல் கரை சேர்ந்தது. கப்பல் தலைவன் பரிசு கொடுக்க எண்ணும் போது, மத்வாச்சாரியார், கப்பலின் அடித்தளத்தில் ஒரு கோடி சந்தனத்தில் ஒருபாறை இருப்பதாகவும், அதைத் தரும்படியும் கேட்டுப் பெற்றுப் பின்னர் உடுப்பியில் பிரதிஷ்டை செய்தார்.

மத்வாசாரியார் உடுப்பியில் பிறந்து எட்டு வயதிலே துறவியானவர். மந்திர சக்தி, சூட்சும செய்கைகளிற் கைதேர்ந்தவர். பல அற்புதங்களைப் புரிந்தவர்.



இந்த ஆலயம் 13 ஆம் நூற்றாண்டு ஆலயம். இராஜகோபுரம் ஐந்து நிலைகள் கொண்டது. விசாலமான வீதிகள் உள்ளன. ஆலயத்தின் கிழக்கே மத்வாசாரியார் அமைத்த விசாலமான மத்வபுஷ்கரணி உள்ளது. இதன் நடுவில் கருங்கல் மண்டபம் அமைந்துள்ளது.

குழந்தைக் கிருஷ்ணரை வழிபடும் முறைக்கும் ஒரு வரலாறு உள்ளது.

கனகதாசர் என்ற மகான், தாழ்த்தப்பட்ட குலத்தில் பிறந்ததால் கோயிலின் உள்ளே சென்று வழிபட அநுமதிக்கப்படவில்லை. கிருஷ்ணரிடம் மிகுந்த பக்தி மேலீட்டால், கருவறையின் பின்னே நின்று ஏகதாரி வீணையை - ஒரு கம்பி மட்டும் கொண்ட வாத்தியக் கருவி - மீட்டித் தினமும் வழிபட்டு வந்தார். ஒருநாள் கருவறையின் பின் பக்கச் சுவர் கற்கள் தாமாகவே விழுந்தன. கிருஷ்ணபகவானும் பின் நோக்கித் திரும்பி, கனகதாசருக்குக் காட்சி கொடுத்தார். கனகதாசர் வழிபட்ட இடம் கனகதாண்டி என அழைக்கபடுகிறது. தற்போது ஒன்பது துவாரங்களை உடைய வெள்ளியினால் அமைக்கப்பெற்ற இவ்விடத்தைத் துவாரங்கள் ஊடாகத்தான் வணங்கலாம். நாமும் அப்படியே வணங்கினோம்.

மக்கள் தெற்குவாசல் ஊடாகவே சென்று வழிபடுவர். கிழக்குவாசல் பூட்டியே இருக்கும். விஜயதசமி போன்ற விசேட நாள்களில் மாத்திரம் திறந்திருக்கும்.

வெகுசுத்தமாகப் பரிபாலிக்கப்படும் ஆலயம் இது. கர்நாடக அரசு 4 தொன் சந்தனத்தை ஆண்டுதோறும் இக்குழந்தைக் கிருஷ்ணருக்குக் கொடுத்து வருகிறது.

ஆலயத்தின் உள்ளே சிவனுக்குத் தனி சந்நிதியும், நவக்கிரக சந்நிதியும் உண்டு. பசுமடம் பிரமாதமாகக் கோயிலின் உள்ளே இருக்கின்றது. துளசித்தோட்டம், தீப அலங்காரங்களுடன் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் திருமணத்தடை நீங்க, குழந்தைப் பாக்கியம் கிடைக்க, கல்வியில் மேன்மை பெற பால கிருஷ்ணரை வேண்டுவர். காணிக்கையாக துலாபாரம், கோதானம் மக்கள் செய்வர்.



எமைக்கவர்ந்தது உடுப்பியின் தேர் வடிவங்கள் தான். இவை நடுவில் வட்டவடிவமாக பம்பரம் போல் தோன்றின. இங்கு மூன்று வித தேர்கள் உண்டு. பிரம்மரதம், கருடரதம், மகாபூசைரதம் - மூன்றும் ஒன்றாகவே இழுத்துச் செல்வது தைமாத மகர-சங்கிராந்தி தினத்தில் ஆகும்.

பர்யாய வைபவம்:
சுவாமி மடத்தை, ஒருவர் ஏற்கும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இதற்காக விறகால் அமைக்கப்பட்ட தேர் ஒன்று உருவாக்கப்பட்டு, அதை இழுத்துக் கொண்டு சுவாமி மடத்தை அடையும் விழாவாகும். பெண்கள் அழகான கோலங்கள் போட்டுச் செல்லும் வழியை அலங்கரித்திருப்பர். முதலில் யானை ஒன்று முன் செல்லும். பெண்கள் வெள்ளை ஆடைகள் அணிந்து செல்வர். குதிரை ஆட்டங்கள், பலவித வாத்திய இசைகள் யாவும் களை கட்டும். இத்தேரின் விறகு, சமையலுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

அன்னபிரம்ம ஷேத்திரம்:

தானத்தில் சிறந்தது அன்னதானம் ஆகும். எந்தச் சுற்றுலா அணியைக் கேட்டாலும், எதை விட்டாலும் கட்டாயம் ஊட்டி அன்னதானம் அதில் கட்டாயமாகப் பங்குபற்ற வேண்டும் எனக் கூறுவர். வாருங்கள் சமையல் செய்யுமிடமே செல்வோம்.

விசாலமான சுத்தமான இடம். இங்கு சிவாசாரியார்களும், வேறு ஊழியர்களும் பணிபுரிகின்றனர். அதிகாலை 1 மணிக்கே பகல் அன்னதானத்திற்கு வேலைகள் ஆரம்பிக்கும். ஒரு நாளில் மதியமும் இரவும் அன்னதானம் நடைபெறும். சாதாரண நாள்களில் 3000 மக்களும் விசேட நாள்களில் 5000 மக்களும் கலந்துகொள்வர்.

ஒரு பக்கம் கடகடவென காய்கறி வெட்டுவர். மறுபக்கம் சமைப்பர். பாத்திரங்கள் யாவும் பெரிய, விசாலமான அளவில் காணலாம். சாதம் மலைபோல் குவிந்திருக்கும். ஒருவரும் வியர்த்து விறுவிறுத்து இருப்பதில்லை. சுத்தம் சுகாதாரம் நிறைந்த இடம்.

காரச்சோறு, தம்புலி - காய் கறி, துவையல், கோடேலு (சாம்பார்) சாறு (இரசம்), அடை (உருண்டை) காயாதின (வற்றல்), ரசாயன (பதநீர்), கோசம்பரி (பதனிட்ட அவரை) பாயசம், அலே (பஜ்ஜி) போன்றவை பந்தியில் குறைவிலாது கிடைக்கும்.

உடுப்பி கர்நாடகத்தில் ஒரு பகுதி என்றாலும் மக்கள் “துளு” மொழியில் பேசுவர். இங்கு ஒரு இலட்சம் தமிழரும் இருக்கின்றனர்.

இராம நவமி, கிருஷ்ண ஜெயந்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, நரசிம்ம ஜெயந்தி, மகாசிவராத்திரி ஆகியன திருவிழா நாள்களாகும். சித்திரை - வைகாசி மாதம் வசந்த உற்சவம், மாசிமாத - மத்வ நவமி - மிகச் சிறப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறந்திருக்கும் நேரம்:

காலை 4 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை
மங்கள ஆராத்தி - 5:30 மணி
நிர்மால்ய தரிசனம் விசேடமானது.

மத்வபுஷ்கரணி நீரால் தான் மூலவருக்கும் அபிடேகங்கள் நடைபெறுகின்றன.

உடுப்பி, பெங்களூரிலிருந்து 60 கி. மீ தூரம்.

விமானம் - பெங்களூர்,
புகையிரதம் - உடுப்பி
பேருந்து - 0.5 கி.மீ

ஹரே ராமா! ஹரே ராமா!
ராம ராம ஹரே! ஹரே!
ஹரே கிருஷ்ண! ஹரே கிருஷ்ணா!
கிருஷ்ண கிருஷ்ண ஹரே! ஹரே!

மகாமந்திரம்

குறிப்பு: கிருஷ்ணா, ராமா என்றால் உன்னதமான, ஆனந்தமான எனப் பொருள்.
ஹரா - சக்தி - இது நாளடைவில் 'ஹரே' யாக மாறியதாகக் கூறப்படுகிறது.

**சந்திரனின் சாபம்**

சந்திரனின் சாபம் திங்களூரில், சிவனை வழிபட்டதால் மாறியது என்று ஒரு புராண வரலாறும் உண்டு. வாசகர்கள் அதை மனத்திருத்த வேண்டும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# சிவயோகம்
# SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)



## இந்து கலாசார மையம்

## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS

நன்றி

ஆலய நிர்வாகத்தினர்

Muththumari Amman Temple Sivayogam



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"Ammanai Saran Addainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

**அம்பிகையின் திருவருளை பெற**

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்கு

# அன்னதானம் செய்ய அரிய வாய்ப்பு




உங்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் பிறந்தநாள், திருமணநாள், நினைவு நாள் மற்றும் உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

**அன்னதானம் செய்யலாம்...**

உங்களின் £100 பங்களிப்பு

பல பேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்....

இப்புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு தின புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

**YOU CAN CONTRIBUTE FOOD**

**DONATION £100** NO ADMINISTRATION CHARGES

**to Orphanages or Elders Home in Sri Lanka**

**on Your Birthday, Wedding Day Remembrance Day or Any Other Special Function**




**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 06905358**

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்**

**Please donate as much as you can!**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"சுப விசேஷங்களின் சுவை என்றும் உங்கள் உணவகத்தில்"

VEENAS VIRUNTHU

உங்களின் அனைத்து விதமான நிகழ்ச்சிகளுக்கு தரமான முறையிலும், மிக குறைந்த விலையிலும் உணவு செய்து தரப்படும்

WE ACCEPT ALL TYPE OF PARTY ORDERS
LET'S ORDER

PH : 075 1999 3999 | 020 3500 9000
69 High Street Barkingside IG6 2AF, UK | www.veenasvirunthu.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஜனவரி (15-01-2025) தொடக்கம் ஏப்பிரில் (21-04-2025) வரை

| | | |
|---|---|---|
| *27.01.2025* | திங்கள் | பிரதோஷம் |
| *29.01.2025* | புதன் | அபிராமிப் பட்டர் விழா |
| *03.02.2025* | திங்கள் | வருட அபிஷேகம் (ஆறாம் ஆண்டு) |
| *10.02.2025* | திங்கள் | பிரதோஷம் |
| *11.02.2025* | செவ்வாய் | தைப்பூசம் |
| *25.02.2025* | செவ்வாய் | பிரதோஷம் |
| *26.02.2025* | புதன் | மகா சிவராத்திரி |
| *11.03.2025* | செவ்வாய் | பிரதோஷம் |
| *12.03.2025* | புதன் | நடேசர் அபிஷேகம், மாசி மகம் |
| *18.03.2025* | செவ்வாய் | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| *27.03.2025* | வியாழன் | பிரதோஷம் |
| *30.03.2025* | ஞாயிறு | வசந்த நவராத்திரி ஆரம்பம் |
| *07.04.2025* | திங்கள் | யோகசுவாமி குருபூசை |
| *08.04.2025* | செவ்வாய் | வசந்த நவராத்திரி பூர்த்தி |
| *10.04.2025* | வியாழன் | பிரதோஷம் |
| *11.04.2025* | வெள்ளி | பங்குனி உத்தரம் |
| *14.04.2025* | திங்கள் | விசுவாவசு வருடப்பிறப்பு |
| *21.04.2025* | திங்கள் | நடேசர் அபிஷேகம் |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

காலை: *8.30* மணிமுதல் *13.00* மணிவரை
மாலை: *5.00* மணிமுதல் *9.00* மணிவரை

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | |
| Post code | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ .............................. Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |
| President | | Hon. General Secretary | | Membership Secretary | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Thirukkural Stories
# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## செங்கோன்மை
## Good Governance

அதிகாரம்: 55
**குறள்: 544**

Chapter: 55
**Kural: 544**

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

பொருள்:
குடிகளை அன்போடு அரவணைத்துக் கொண்டு செங்கோல் செய்கின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி உலகம் நிலைபெறும்.

The ruler, who upholds and protects the interests of citizen is assured of their strength of support.

சீதையை மணம் செய்து கொண்டு இராமபிரான் அயோத்திக்குத் திரும்பினார். நாட்டு மக்கள் எல்லோரும் இராமபிரானை வாழ்த்தி வித விதமான பரிசுகளை அளித்துக் கொண்டிருந்தார்கள். அந்த மக்கள் கூட்டத்துக்குள், மித்ரபந்து என்ற, செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவனும் இருந்தான். இராமனுக்கு அளவெடுத்துத் தைத்தது போலவே இரண்டு பாதுகைகள் (காலணிகள்) அவனது கைகளில் இருந்தன. மக்கள் ஒவ்வொருவராக வரிசையில் வந்து, தத்தம் பரிசுப்பொருள்களை இராமபிரானுக்குத் தந்து கொண்டிருந்தார்கள். எல்லோரும் விலை உயர்ந்த பரிசுகளைக் கொடுக்கும் போது, தான் மட்டும் அந்த அற்ப காலணிகளைப் பரிசளிப்பதா என்றெண்ணி மித்ரபந்து மனம் வருந்தினான். எனவே, இராமனைப் பார்க்காமலேயே திரும்பிப் போக எத்தனித்தான். அதனைக் கவனித்துவிட்ட இராமபிரான், அவனை அருகே அழைத்தார். “உண்மையான உழைப்பில் உருவான உனது பரிசுதான் இங்கே இருக்கும் அனைத்தையும் விட உயர்ந்தது. எனக்குப் பிடித்தமானதும் இதுவே” என்று அவனிடம் சொல்லி அந்தப் பரிசினை வாங்கிக் கொண்டார். மித்ரபந்து அந்த அன்பில் நெகிழ்ந்து போனான்.

அதன் பிறகு, நாமனைவரும் அறிந்தபடி, இராமபிரான் வனவாசம் செல்லப் புறப்படுகிறார். அப்பொழுது, “தாயே! வனவாசம் செல்லும் போது எதையுமே எடுத்துச் செல்லக்கூடாதுதான், இருப்பினும் இந்தப் பாதணிகளை அணிந்து செல்ல எனக்கு அநுமதி தாருங்கள்” என்று கேட்டு, அநுமதி வாங்கினார் இராமர்.

அங்கே நின்றிருந்த மக்கள் கூட்டத்தில் கண்ணீர் வழிந்தோட நின்ற மித்ரபந்துவை நோக்கினார். “விலை உயர்ந்த எந்தப் பரிசும் எனக்குப் பயன்படவில்லை. நீ அளித்த காலணிகள் தான் என் கால்களைக் காக்கப் போகின்றன” என்று அவனிடம் கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை அன்பின் அடையாளமான அந்தப் பாதுகைகள் தான் பின்னர் பதினான்கு ஆண்டுகள் அயோத்தியின் அரியணையில் அமர்ந்து ஆட்சியும் செய்தன.

கடவுளுக்கு யார் என்ன செய்கிறார்கள் என்பது முக்கியமல்ல. உங்களால் முடிந்ததை மனப் பூர்வமான பக்தியுடனும், அன்புடனும் அவரது திருவடிகளில் சமர்ப்பியுங்கள். அதுவே கடவுளைச் சந்தோஷப் படுத்தும். இறைவனுக்கு மிகவும் பிரியமானதாகவும் இருக்கும்.

After getting married to Sita, Lord Rama returned to Ayothi. People of Ayothi were overjoyed to see him return. They were wishing him and were offering various valuable gifts.

Mithrabhanthu, a cobbler, was among those people. He was holding a pair of footwear in his hands which he stitched, just to fit Rama's feet perfectly.

(The word 'pathukai' (பாதுகை) in Tamil means a foot wear with one knob. They are worn with the knob between the big toe and the second toe. This footwear is also called 'mithiyadi' (மிதியடி) in Tamil.)

Everyone came in a queue and handed over their valuable presents to Rama. While all the people were offering valuable presents, Mithrabhanthu felt very guilty, thinking as how he could offer the foot wear – the cheapest gift of all -to Rama and tried to get away from the place without meeting Rama.

Rama, on noticing this, called Mithrabhanthu asking him to come closer.

'Of all the gifts offered to me, yours, was made with your hard work, is the best one and the one I like the most' Rama said and received the foot wear- the so called Pathukai – from Mithrabhanthu. Mithrabhanthu became emotional, feeling the great love that Rama was showing.

After this event, as we all have already know, Rama had to leave the Kingdom of Ayothi, allowing his brother Parathan to be crowned and proceeded to the jungle for 14 years.

When he was ready to leave, he asked his mother, 'Oh! Mother, it is not proper for me to take anything with me when I am leaving to go to the jungle. Nevertheless, Please grant me permission to take this Pathukai with me' – and took the footwear with him. Rama looked at Mithrabhanthu, who was standing among the crowd, with tears coming from his eyes, – and told him, 'The footwear you gifted me is the only thing which is going to protect my feet and not any other valuable presents'.

The very same footwear was brought back to Ayothi by Parathan, who pretended the footwear as his brother Rama and placed them on the throne in Rama's absence. The footwear, thus in effect. was ruling Ayothi until Rama returned.

Whatever we do to serve God, do it whole heartedly and with faith. This unconditional devotion only can make God happy.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAIVA SCHOOL OF HINDUISM

(By late S. Shivapathasundaram B.A)

(continued from last issue)

## CHAPTER 3

### AN OUTLINE OF SAIVA DOCTRINE

God:

We may start with the assumption that the universe has been undergoing evolution. In the course of this evolution, living beings have been variously adapting themselves to varying environments. There must be a power in them which makes this variation possible. Again, the varying nature of the adaptation shows that the power is not mechanical, but intelligent. It must be possessed by some intelligent being.

This Being is usually called God. Since He leads all souls to perfection He must be an all-loving Being.

The Soul:

The essence of all living beings is the soul. But there is difference of opinion as to what this essence is. Some attribute to the soul knowledge, desire and energy, which are ever changing. Some postulate a free-will in addition to them. The soul so understood is an indefinite and complex conception and cannot therefore receive scientific treatment. If one man invests the soul with certain adjuncts and another man with other adjuncts, the two men use the same word to denote two different things and cannot find means of agreement. The right course is to use the word to denote the essence of a living being, divested of all its adjuncts. It then becomes a simple thing that cannot be analysed any further.

Since living beings are numerous, souls also are numerous. We see that a living being knows, desires, and does. Therefore the soul must have the ability to know, to desire, and to do. But we see that the knowledge of a living being, say a man, changes. This change must be due to the change in the quantity of the power of knowing. Since the soul is an elementary being, it cannot undergo change (corollary I).

Therefore the power of knowing is not a characteristic of the soul. Besides, if it belonged to the soul, it would be definite in quality and strength or degree and could never change. But we see that it does change. Therefore the power or the energy is not the soul's and must be supplied to it by something else. Just as an engine is a mechanism that can move, but moves only when power is supplied to it, so the soul has the ability to know, and begins actually to know only when the power of knowing is supplied to it.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The desire of a living being also changes both in degree and in kind. Therefore the power of desiring cannot be the soul's. It can similarly be shown that the power of doing also is not the soul's. So, we see that the soul has the ability to know, to desire, and to do, but not the energy or power necessary for the activities.. The energy must therefore be supplied to it by something else.

Maya:

That which supplies the energy to the soul is called Maya in our religion. It supplies not only the energy but also the tools necessary for using the energy, namely, the physical and the mental powers. It also gives the embodied soul a world to live in and things in the world to enjoy.

All the worlds are products of Maya. These worlds are constantly undergoing change and are either in process of formation or in process of disintegration. In other words, they are evolving or involving.

The word Maya itself means that which (Ma =) involves and (Ya =) evolves. The body, the mind, and the energy have all come from Maya and are therefore, ultimately, not different from one another. As Maya cannot be further resolved it must be eternal. (corollary 2).

But the knowledge that the soul receives through the products of Maya is limited and often leads either to doubt or to error. Just as, in dim light, a snake is mistaken for a piece of rope or is held in suspense as being either a snake or a rope, so, with the little knowledge that we derive through Maya, we often mistake wrong for right or are in suspense regarding the true nature of a thing. This limitation of knowledge must be due to some other cause or factor.

Anava:

This cause or factor is called Anava in our religion. The word literally means that which makes the soul (Anu =) an atom, that is, makes it indefinitely small and powerless. Anava constricts the soul's abilities to know, to desire and to do and does not allow power to have its full scope.

But certain products of Maya exert a force in opposition to it and allow a gradually increasing flow of energy according to certain principles.When the soul gets a little knowledge, it becomes conscious of itself, identifies itself with the body, and commits endless blunders.

The most pathetic feature of its blunders is that it is hardly ever aware of them. False pride is one of the first products of little knowledge, when a person is actuated by it he feels he is quite in the right. The consequence is that the person does not realise for a long time that pride is his bitterest foe. Anava is thus the root cause or the soul's blunders and consequent misery. Maya gives limited knowledge through the senses and intellect and assists the sould in its struggle with Anava.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Action:

The acts of the soul appear as thoughts, words, and deeds. Right actions are those that are good to the self (ego) and to others. Such acts naturally cause happiness. Wrong acts are those that are bad to the self (ego) and to others. As they break harmonious relationships, they cause pain. Though right actions are sometimes accompanied by immediate pain, they ultimately bring pleasure which far outweighs the pain. Similarly, a wrong act may give immediate pleasure but ultimately leads to misery.

The pain and pleasure due to right deeds and wrong deeds respectively are not necessarily experienced immediately after the deeds, but reach the soul as circumstances permit, sometimes much long after the deed. Murderers are sometimes arrested several years after the murder and then punished.

The effects of these actions, manifested as pain and pleasure, produce a tendency in the souls to prefer the right and avoid the wrong. This tendency, coupled with the knowledge received during the experience, has the power of counteracting the evil effects of Anava. When Anava is completely overcome, the soul becomes free and reaches the final goal.

The Path:

The path to the ultimate goal may be conveniently divided into three phases.

At the beginning of the first phase the soul's knowledge is so little that it thinks of itself as an important being in the universe and is filled with the thought of itself and of its greatness (selfish). It is then individualistic and anti-social.

While passing through this section, it realises that its own welfare is to some extent linked with the welfare of others and feels the necessity to love and help others and to be loved and helped by others.

In the second phase, it puts into practice the lesson it learned while in the first section, fancies itself to be only a member of society and not an individual and endeavours to conserve the good of society as a whole (unselfish).

The love for the society, of which it is a member, gradually extends to other societies and ultimately embraces the whole human race. It no longer considers service as a duty but feels that it is a natural function of man and finds satisfaction in its performance.

In the third phase, the self loses its individuality and begins to think in terms of humanity at large (selfless). This brings further light to the soul and reveals to it its identity with that, on which the whole universe depends, namely God.

The third phase begins here, and the activities of the soul are directed by this new conception of oneness with God and take the form of service to God and through Him to other living beings.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Attachment to God becomes strengthened in this section and ends in identfication with God, which is the ultimate goal.

Exercises:

Each phase of the path has exercises (rituals) specially suited to it. Their purpose is to facilitate the journey through the particular section. The ordinary acts of man have only an indirect influence on the onward march. But these rituals have that special object in view. Some of these are reminders of the ideals.

To this class belong the sacred ashes of the Saivite, the cross of the Roman Catholics, and the rituals of various religions. The cross reminds the Christian of the sacrifice of the Christ; the sacred ashes remind the Saivite of the love of God and spiritual illumination, and rituals generally serve to concentrate attention on the relationship of the soul to other ultimate reality.





Reading the lives of saints and learning to love them tend to raise one to their level. The contemplation of God and of His perfection brings home to one's mind one's own insignificance, lifts one's thoughts to high ideals, and directs one's love to the ultimate reality.

Besides these, there is a whole series of graded rituals particularly suited to each phase of the path, which make themselves felt in the lives of men, influence their character, and uplift them.

The Goal:

The ultimate goal is becoming one with God. The soul has no power of its own, but has the ability to use any power it receives. Its activities depend upon the amount of power that it receives. This power gradually increases and illumines the soul.

At the goal, the soul is once and for all free from the hold of Anava and is filled with and enveloped in the love of God. It is then indistinguishable from God, just as a crystal pillar in the rays of the noon-day sun cannot be distinguished from the light. It has then none of the activities of knowing, desiring, or doing. It enjoys the inexpressible bliss which knows no change, and in which all thought of lover, love, and the beloved is absent.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# சிவராத்திரி விரதம்



திரு க செல்வரத்தினம்

எமது சமயம் சைவசமயம். சைவசமயம் சிவபெருமானையும் அவரது சக்தியையும் வணங்குகின்ற சமயம் ஆகும். சிவபெருமான் அன்பே வடிவானவர். ஆதியும் அந்தமும் இல்லாத பரம் பொருள். சிவம் என்றால் மங்கலம் அல்லது நன்மை என்று பொருள் படும்..

விரதங்கள்:

எமது இறைவனை மேலும் உணர்ந்து செயற்பட விரதங்கள் உதவியாக இருக்கின்றன. விரதங்கள் கடவுள் நம்பிக்கையை ஏற்படுத்தவும், குடும்ப ஒற்றுமையை வளர்க்கவும், மன மகிழ்வை அதிகரிக்கவும் உதவுகிறது. விரதங்களைக் கடைப்பிடிக்கும் வழிமுறைகள், உணவுக் கட்டுப் பாடுகள், பூசை முறைகள் என்பன விதிமுறைகளாகக் காணப்படுகின்றன. ஒவ்வொரு விரதமும் குறிப்பிட்ட சில வருடங்களுக்குத் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட வேண்டுமென விதிகள் கூறுகின்றன.

விரத நாள்களிலும் அதற்கு முதல் நாளிலும் மச்சம், மாமிசம், முட்டை முதலானவற்றை நீக்குதல் அவசியமாகும். புராண வரலாறுகள், அழகான தத்துவங்கள் மூலம் விரதங்களின் மகிமையை உணர்ந்து கொள்ள முடியும்.

சிவ விரதங்கள் பல வகைப்படும்

சிவ விரதம், சோம வார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதார கௌரி விரதம், கல்யாணசுந்தர விரதம், சூலவிரதம், இடப விரதம், திருவெம்பாவை விரதம் என மொத்தம் ஒன்பது ஆகும்

1. சோமவார விரதம் கார்த்திகை மாதம் வரும் திங்கட்கிழமை தொடங்கிச் சோம வாரந்தோறுஞ் சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும்.

2. திருவாதிரை விரதம் மார்கழி மாதத் திருவாதிரை நட்சத்திரத்திலே உபவாசம் இருந்து அநுட்டிப்பது. சிதம்பரத்தில் அநுட்டிப்பது உத்தமம்.

3. உமாமகேசுர விரதம் கார்த்திகைமாதப் பௌர்ணமியிலே உமாமகேசுர மூர்த்தியைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும்.

4. கேதாரகௌரி விரதம் புரட்டாதி அட்டமி முதல் இருபத்தொரு நாள்கள் கேதார நாதரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும்.

5. கல்யாணசுந்தர விரதம் பங்குனிமாத உத்தர நட்சத்திரத்திலே அநுட்டிக்கும் விரதமாகும்.

6. சூல விரதம் தை அமாவாசையில் சூலாயுதத்தைத் தரிசித்து பெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இடப விரதம் வைகாசிமாத சுக்கில பட்ச அட்டமியில் சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும்.

8. பிரதோஷ விரதம் மாதம் இருமுறை வரும் திரயோதசி திதியில் சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாகும்

9. திருவெம்பாவை விரதம் மார்கழி மாதத் திருவாதிரையை இறுதி நாளாகக் கொண்டு, குறிப்பாக கன்னிப் பெண்கள் கடைப் பிடிப்பர். சிவ தொண்டர்கள் அதிகாலை எழுந்து வீதி வீதிகளாகச் சென்று சங்கு ஊதி, திருவெம்பாவைப் பாடல்கள் பாடி மக்களை நித்திரையால் எழும்பி ஆலயத்திற்குச் செல்லத் தூண்டுவர்.

சிவராத்திரி விரதம்: சிவராத்திரி விரதம் ஐந்து வகைப்படும்

1 நித்திய சிவராத்திரி விரதம் வளர்பிறை (சதுர்த்தசி நாள்கள்)
2 தேய்பிறை சதுர்த்தசி நாள்கள்
3 பட்ச சிவராத்திரி
4 யோக சிவராத்திரி
5 மாத சிவராத்திரி



மகா சிவராத்திரி:

மாசி மாதத்துத் தேய்பிறை 14ஆம் நாளான கிருட்டிணபட்ச சதுர்த்தசி திதியில் சிவபெருமானைக் குறித்து மகா சிவராத்திரி அநுட்டிக்கப் பட்டு வருகின்றது. அன்று இரவு முழுதும் கண் விழித்திருந்து உபவாசம் செய்து நான்கு யாமமும் நித்திரையின்றி சிவபூசை செய்தல் வேண்டும். இந்த இராத்திரியில் 14 நாழிகைக்கு மேல் முகூர்த்தம் லிங்கோற்பவ காலம். சைவசமயிகள் யாவராலும் இந்த விரதம் பின்பற்றப் படுவது அவசியமாகும்.

புராணக் கதைகள்:

1 யார் பெரியவன்?

படைத்தல் தொழிலைப் பிரம்மாவும் காத்தல் தொழிலை விட்டுணுவும் செய்து வருகின்றனர். இக் காரணத்தால் இருவரிடமும் யார் பெரியவர் என்ற போட்டி ஏற்படுகிறது. பிரம்மன் அன்னப்பட்சியாக வடிவெடுத்து முடியைத் தேடி யுகம் யுகமாக அலைந்தார்.

விஷ்ணு வராக உருவில் அடியைத் தேடிக் குடைந்து காணப் புறப்பட்டார். ஆனால் இருவரும் அடியையும் முடியையும் காணாது திரும்பத் தொடங்கினர். விஷ்ணு அடிகைளைக் காண முடிய வில்லை எனக் கூறினார். பிரம்மாவோ தான் முடியைக் கண்டதாகவும் அதற்கு சாட்சியாக இறைவனின் தலையில் இருந்து கீழ்நோக்கி விழுந்து கொண்டிருந்த தாழம்பூவின் துணையுடன் பொய் கூறினார். பொய் கூறியதால் பிரம்மாவுக்குத் தனிக்கோயில் இருக்கக்கூடாது என்றும் தாழம்பூ பூசைக்குப் பயன்படுத்தப்படாது என்றும் இறைவன் தீர்மானித்தார். இருவரும் தங்கள் தவறை உணர்ந்தனர். இவர்கள் இருவருக்கும் இடையில் ஜோதி வடிவமாக நின்ற இறைவன் இலிங்க வடிவமாகக் காட்சி கொடுத்து அருளிய தினமே மகா சிவராத்திரி தினம் என அநுட்டிக்கப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருஞான சம்பந்தப் பெருமானின் திருகோணமலை பதிகப் பாடல்:

அருவரா தொருகை வெண்டலை ஏந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணமொள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்த நன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

திருமுறை 3 பதிகம் 123 பாடல் 9

2 வேடுவச் சிறுவனின் கதை:

மாசிமாதத்தில் ஒரு நாள் ஒரு வேடுவச் சிறுவன் வைகாவூர் காட்டிலே வேட்டையாடச் சென்றான். நாள் முழுவதும் அலைந்து திரிந்தும் அவனுக்கு ஒரு மிருகமும் கிடைக்கவில்லை. திரும்பும் போது தூரத்தில் ஒரு புலியைக் கண்டு நடுங்கி, பக்கத்தில் நின்ற ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான். புலியும் அவனைப் பதம்பாரக்க மரத்தடியில் படுத்துக் கொண்டது. சோர்வில் தன்னை அறியாமல் நித்திரை வந்திடுமோ என்ற அச்சத்தினால் மரத்தில் இருந்த இலைகளை ஒவ்வொன்றாகப் பிடுங்கிக் கீழே போட்டான். பொழுது விடிந்தது. கீழே பார்த்தபோது புலி சென்றுவிட்டது. இறங்கி வந்தான். மரத்தின் கீழே சிவலிங்கம் இருப்பதைக் கண்டான். அவன் ஏறி இருந்த மரம் வில்வமரம். அன்று சிவராத்திரி தினம் என்றும் இரவு முழுதும் விழித்திருந்து சிவலிங்கத்தின் மேல் பிடுங்கிப் போட்ட இலை வில்வம் இலை என்றும் அந்த நற் காரியத்தின் பயனால் அவனுக்கு மோட்சம் கிடைத்ததாகவும் புராணங்கள் கூறுகின்றன.

3 பாற்கடலில் நஞ்சு வந்த கதை:

தேவர்களும் அசுரர்களும் சேரந்து வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி, பாற்கடலை கடைந்த போது பாம்பு நஞ்சைக் கக்கியது. அதைக் கண்டு தேவர்கள் பயந்து ஓட, இறைவன் அந்த நஞ்சை அருந்தித் தேவரைக் காத்த தினம் சிவராத்திரி தினம் என்று கூறப்படுகிறது.

4 மாரக்கண்டேயர் வரலாறு:

மார்கண்டேயரின் உயிரைக் கவர வந்த எமனைக் காலால் உதைத்துக் காத்த நாள்.

5 பிருங்கி முனிவர்:

பிருங்கி முனிவர் சிவனை வலம்வரும்போது, சக்தியையும் சேர்த்து வலம்வராது, சிவனுக்கும் சக்திக்கும் நடுவே போய், சிவனை மட்டும் வணங்கினார். இதனால் சக்தி கோபங் கொண்டு இறைவனிடம் முறையிட்டார். இறைவனின் ஆலோசனைப்படி சக்தி பூமிக்குச் சென்று தவஞ் செய்தார். அதன் பயனால் இறைவன் தன்னில் சரிபாதியைச் சக்திக்குக் கொடுத்து அர்த்த நாரீஸ்வரராகக் காட்சி கொடுத்த நாள் சிவராத்திரி தினம் என்பர்.
அர்த்தநாரீசுவர மூர்த்தத்தின் மூலம் சைவத்தில் சமத்துவம் காட்டப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 பார்வதி தேவி விளையாட்டாகச் சிவனின் கண்களை மூடியதும் அண்டசராசரம் இருண்டதனால் செய்த பாவத்தைப் போக்கத் தேவி விரதம் இருந்ததனால் இறைவன் அதை ஏற்று ஒளியை வழங்கிய நாள் சிவராத்திரி என்பதும் ஒரு வரலாறு.

7 அர்ச்சுனன் கடும் தவஞ் செய்து இறைவனிடம் இருந்து பாசுபதாஸ்திரம் பெற்ற நாள்

8 பகீரதன் கடுந் தவஞ் செய்து கங்கையைப் பூமிக்கு கொண்டு வந்த நாள்.

9 கண்ணப்ப நாயனார் இறைவனுக்கு தனது கண்ணை கொடுத்த நாள்.

10 மதுரையில் அரசனின் வேண்டுதலுக்கு நடராஜப் பெருமான் கால்மாறி ஆடிய நாள்.

11 .ஒருமுறை குரங்கு ஒன்று வில்வ மரத்தில் ஏறி வில்வம் இலைகளைப் பிடுங்கிக் கீழே எறிந்து கொண்டிருந்தது. சில இலைகள் இறைவனின் திருமுடியில் விழுந்ததைக் கண்ட உமா தேவியார் வருந்தினார். இறைவன் "குரங்கு நம்மை அர்ச்சனை செய்கின்றது" என்றார். அப்படிப் பூசித்த பலனால் அடுத்த பிறவியில் அந்தக் குரங்கு பூமியில் முசுகுந்தச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது. இறைவன் குரங்கின் மீது தாயினும் சால அன்பு காட்டுவதைக் காண்கிறோம். இப்படியான கதைகள் யுகம் யுகமாக நடந்த நிகழ்வுகளாகக் கொள்ளலாம்.

சிவராத்திரி விரதம் அநுட்டிப்போர் லௌகீக இன்பங்களோடு ஆன்ம இலாபத்தையும் பெற்று இம்மை மறுமை இரண்டிலும் நன்மையைப் பெறுவர். தனித்திரு, பசித்திரு, விழித்திரு என்ற தத்துவம் மனித மேம்பாட்டிற்குப் பொருத்தமானது. பிற விடயங்களில் மனதைச் செலுத்தாது இறை சிந்தனையுடன் விரதம் இருப்பதே சாலச் சிறந்தது. பொய் சொல்லி வாழ்ந்தாரும் இல்லை மெய் சொல்லிக் கெட்டாரும் இல்லை என்பதைச் சிறுவர்கள் மனதில் பதிய வைக்கலாம்.

சிவராத்திரி விரதம் இருப்போர் முதல் நாள் ஒரு நேர உணவுண்டு சிவலிங்கத்தை வில்வ இலையால் அரச்சனை செய்வது சிறந்தது. சிவராத்திரி தினத்தன்று நான்கு சாமப் பூசைகள் நடைபெறும். சிவராத்திரி இரவில் நிகழும் இலிங்கோற்பவ பூசை மிக முக்கியமானது. நள்ளிரவில் சிவபெருமான் இலிங்க வடிவினராகத் தோன்றியதால் இப்பெயர் பெற்றது. இத்தினம் விரத தினமாகவும் விழாவாகவும் கொண்டாடப்படும். சிவ வழிபாடு பற்றிய பேச்சுக்கள், பாடல்கள், நாடகங்கள் ஆகியவற்றை எடுத்து இயம்புவது மிகவும் சிறந்ததாகும். சிவராத்திரியை எதிர்காலச் சந்ததியினரும் பொருள் உணர்ந்து பின்பற்றக் கூடியவகையில் இன்று வாழும் தலைமுறையினர் வழி காட்ட வேண்டும். மூர்த்தி, தலம், தீர்த்தம் உள்ள சிவாலயங்களில் நான்கு சாமப் பூசை நடைபெறும். மக்கள் விழித்திருந்து விரதமிருப்பது அதிக பயனைத்தரும். சிவராத்திரி அன்று சகல இலிங்கங்களிலும் இறைவன் தோன்றுவதாக ஐதீகம். அடுத்த நாள் அன்னதானம் செய்து. பாரணை பண்ணி விரதத்தை நிறைவு செய்வது சிறப்பானது.

மனிதப் பிறவியை பெற்ற நாம் சிவ விரதங்களையும் அவற்றின் உண்மைக் கருத்துக்களையும் உணர்ந்து பக்தியுடன் அனுட்டித்து இறைவன் அருளைப் பெற்று உய்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஞ்சாலி சபதம்



அநுஜா

பாஞ்சாலி துருபதன் தவமிருந்து பெற்ற அருந்தவப் புதல்வி; மேன்மையுள்ள பாண்டவர்களின் அருமை மனைவி; மகாராணி; சிறியதந்தையின் (பாண்டுவின்) மருமகள். இத்தகைய தகைமைக்குரிய பாஞ்சாலியை பாண்டவர் சூதில் பணயமாக வைத்துத் தோற்றுவிட்டதால், துரியோதனனின் அதர்மமான கட்டளையை ஏற்று முட்டாளான, நீதிநெறி அறியாத துச்சாதனன் அரச சபைக்கு அழைத்து வந்த முறையற்ற செயலுக்காக அந்தச் சபையில் இருந்த பீஷ்மர், துரோணர், கிருபாசாரியார், நாட்டை நீதி தவறாது ஆளும் மன்னர்கள் ஆகியோரிடம் நியாயம் கேட்கிறாள் திரௌபதி. முதலில் தனது கணவன்மாரை நோக்கி, "அம்மி மிதித்து, அருந்ததி காட்டி, வேதமோதி, ஹோம அக்கினியின் முன் என்னைக் கைவிடமாட்டேன் என்று உறுதியளித்து திருமணம் செய்த நீவிர், இங்கு இப்பாதகர்கள் என்னைக் கேவலமாக நடத்துவதைப் பார்த்துக் கொண்டு இருப்பீர்களோ?" என்று கேட்டாள்.

> "விதியோ கணவரே!
> அம்மி மிதித்தே அருந்ததியைக் காட்டியெனை
> வேதச் சுடர்த்தீமுன் வேண்டி மணஞ்செய்து
> பாதகர்முன் இந்நாள் பரிசழிதல் காண்பீரோ?"

உள்ளம் கொதித்துக் குமுற இருந்த வில் வீரனான அருச்சுனனும், பராக்கிரமசாலியான வீமனும் நாங்கள் இப்படி இருப்பது சரிதானா? என்று மனக்குறிப்பு முகத்தில் தோன்ற ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். தர்மன் செயலுக்கு வருந்தி வெட்கப்பட்டுத் தலை குனிந்து கொண்டான். அவர்கள் மௌனமாக ஒன்றும் செய்ய முயற்சிக்காததைக் கண்டு மனம் வெதும்பிச் சபையை நோக்கிப் பல நியாயமான கேள்விகளை எழுப்புகிறாள் பாஞ்சாலி. "இந்தச் சபையில் கல்வி கேள்விகளில் சிறந்தோர் எவருமில்லையா? குற்றமற்ற உயர்ந்த குணமுள்ளவர்கள் நியாயத்தை நிலைநிறுத்த வேள்விகள் யாகங்கள் செய்த பிராமணர்கள் இருக்கிறீர்களே! இங்கு இவர்கள் எனக்கு இழைக்கும் கொடுமையைக் கண்டு ஏன் கோபமில்லாமல் சாந்தமாக இருக்கிறீர்கள்? இந்தக் கொடியவனின் பாதகச் செயலைக் கண்டும் அதனைச் சுட்டிக்காட்டாது இருக்கிறீர்கள்? இங்கு வில்வித்தையில் சிறந்த அரசர்களும் இருக்கிறீர்கள்".

> "கேள்வி பலவுடையோர் கேடிலா நல்லிசையோர்
> வேள்வி தவங்கள் மிகப்புரிந்த வேதியர்கள்
> மேலோர் இருக்கின்றார், வெஞ்சினமேன் கொள்கிலரோ?
> வேலோ ரெனையுடைய வேந்தர் பிணிப்புண்டார்,
> இங்கிவர்மேற் குற்றம் இயம்ப வழியில்லை"

ஒருவரும் அவளின் துன்பத்தைத் தீர்க்க முன்வரவில்லை. ஏன் என்பது பாஞ்சாலிக்குத் தெரியவில்லை. அந்நிலையில், தானே அவனது துஷ்டச் செயலைச் சுட்டிக் காட்டுகிறாள். முறையற்றவனே இந்தப் பெருமக்கள் சூழ்ந்திருக்கும் சபைக்கு என்னை இழுத்து வந்தது பற்றிக் கேவலமாக வேறு பேசுகிறான். உன்னை நிறுத்துடா என்று சொல்வாரில்லை. என்று கதறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதாள். பின்பு தனது ஒளி பொருந்திய கண்ணில் கோபக்கனல் பறக்கப் பாண்டவரை உற்று நோக்கினாள். (மிக ஆத்திரத்துடன் தன் கணவன்மாரைப் பார்த்தாள்) அவர்கள் எதுவும் பதில் சொல்ல முடியாதவர்களாய் நேருக்கு நேர் பாஞ்சாலியைப் பார்க்கத் துணிவின்றித் தருமனும் மற்றவர்களும் தலை குனிந்து கொண்டனர்.

பாண்டவர்கள் மனம் தளர்ந்து எதுவும் செய்ய முடியாதவர்களாய் பேதலித்து இருப்பதைக்கண்ட துச்சாதனன், அவர்கள் தன்னைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ மாட்டார்கள் என்று மிகத்துணிவுடன் பாஞ்சாலியைப் பார்த்து “நீ இப்போது நாங்கள் இடும் கட்டளைகளை மறுக்காது செய்ய வேண்டிய தாதியடி என்று சொன்னதுடன், பல கொடிய வார்த்தைகளால் அவளைத் திட்டுகிறான். அவன் பாஞ்சாலியைக் கேவலமாகத் திட்டுவதைக் கண்டு ரசித்து மகிழ்கிறான் கர்ணன். இது பன்றியுடன் சேர்ந்த பசுவும் மலம் உண்ணும் என்பதைப் போல், குந்தி தேவியின் இன்னொரு மகனானவன், பாண்டவரைப் போலவே இருக்க வேண்டியவன் துஷ்டர்களான துரியோதனனாதியோருடன் வாழ்ந்து வந்ததால் அவனும் அவர்களைப் போலவே இருக்கிறான் என்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறார் பாரதியார். பாஞ்சாலியை அடைய வேண்டுமென்ற துரியோதனின் ஆசை நிறைவேறிவிட்டதைக் கண்டு சகுனி அவனைப் பாராட்டுகிறார். சபையோர் அங்கு நடப்பவை கனவோ, நனவோ என எண்ணித் திகைத்து அமைதியாக அமர்ந்திருந்தனர்.

“மற்றவர்தாம் முன்போல் வாயிழந்து சீர்குன்றிப்
பற்றைகள்போல் நிற்பதனைப் பார்த்து, வெறிகொண்டு
‘தாதியடி தாதி’ யெனத் துச்சாதனன் அவளைத்
தீதுரைகள் கூறினான் கர்ணன் சிரித்திட்டான்;
சகுனி புகழ்ந்தான். சபையினோர் வீற்றிருந்தார்!”

இறுதியாக (இவ்வளவும் நடந்து முடிந்ததும்) கடைசியில் கல்வி அறிவும் வீரமும் பொருந்திய பீஷ்மர் பேச ஆரம்பிக்கிறார். பெண்ணே! உன் கணவன் தர்மன் சூதில் வல்ல சகுனியுடன் சூதாடியதில் உன்னைப் பணயமாக வைத்து தோற்றுவிட்டான். நீ அவன் செயலை மறுத்து வாதாடுகிறாய். முற்காலத்தில் இருந்த (வாழ்ந்த) வேதநெறிகளைக் கற்றுணர்ந்த நீதி நெறிப்படி நீ சொல்வது போல அது குற்றமாக இருந்திருக்கலாம். அது நீண்ட காலத்திற்கு முன்பிருந்த வழக்கமாகும். ஆணும் பெண்ணும் சரிசமமாகவே முன்னோர் பேணி (கடைப்பிடித்து) வந்தனர். இன்று நடைமுறையிலிருக்கிற நீதி நூல்களின்படி சிந்தித்துப் பார்த்தால் முன்னைய முறை மாற்றமடைந்துவிட்டது. காலம் செல்லச்செல்ல நன்னெறிகள் வழக்கொழிந்து போக, தீயவை மெல்லத் தலைதூக்குவதை அவதானிக்க முடிகிறது. இதனை முந்தைய இலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன.

“தையலே!
சூதாடி நின்னை யுதிட்டிரனே தோற்றுவிட்டான்
வாதாடி நீயவன்றன் செய்கை மறுக்கின்றாய்.
சூதிலே வல்லான் சகுனி தொழில்வலியால்,
மாதரசே நின்னுடைய மன்னவனை வீழ்த்திவிட்டான்.
மற்றிதனில் உன்னையொரு பந்தயமா வைத்ததே
குற்றமென்று சொல்லுகிறாய் கோமகளே, பண்டையுக
வேத முனிவர் விதிப்படிநீ சொல்லுவது
நீத மெனக்கூடும்; நெடுங்காலச் செய்தியது”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீஷ்மர் மாற்றத்தைத் திரௌபதிக்கு எடுத்துரைக்கிறார். பெண்ணே! இப்போது பெண்கள் ஆண்களுக்கு ஒப்பானவர்கள் இல்லை. அவர்கள் விரும்பினால் தனது மனைவியை விற்கலாம், வேறு ஒருவருக்குக் கொடுத்திடலாம். (அரிச்சந்திர புராணத்தில் இப்படி ஒரு நிகழ்வு வருகிறது) இது முழுக்க முழுக்க மிருக்கத்தனமின்றி வேறில்லை. அதனால் தருமன் தன்னை விற்ற பின்பு உன்னை அவர்களுக்கு (துரியோதனனாதியோர்க்கு) அடிமையாக்குவது இன்றைய நீதிப்படி சரியானதே. எது தர்மநெறி என்று அறியாதவர்களுடைய செயல்களைப் பார்த்தால் கல்லுக்கூட நடுங்கும். மிருகங்கள் கூடப் பார்க்க விரும்பாது கண்களை மூடிக் கொள்ளும். இங்கு நடப்பவை நீதிக்குப் புறம்பானவை என்று தெரிந்தபோதும் இன்றைய கால கட்டத்தில் அவையெல்லாம் மாறிவிட்டன. நீ இங்கு நடப்பவை அநீதியானவை என்று சுட்டிக் காட்டுவதால் நான் அதற்கான விளக்கத்தைக் கூறுகிறேன். ஆனால் நடப்பவை அநீதியானவை என்பதைத் தன் மனத்தளவில் ஏற்றுக் கொண்டாலும் இக்கால வழக்கப்படி அவை தவறல்ல, சரியானதே என்று பீஷ்மர் கூறுகிறார்.

“ஆணொடு பெண்முற்றும் நிகரெனவே அந்நாளில்
பேணிவந்தார்; பின்னாளில் இஃது பெயர்ந்துபோய்
இப்பொழுதை நூல்களினை எண்ணுங்கால், ஆடவருக்
கொப்பில்லை மாதர், ஒருவன்தன் தாரத்தை
விற்றிடலாம்; தானமென வேற்றுவர்க்குத் தந்திடலாம்
முற்றும் விலங்கு முறைமையன்றி வேறில்லை
தன்னை யடிமையென விற்றபின் னுந்தருமன்
நின்னை யடிமையெனக் கொள்வதற்கு நீதியுண்டு”

“துரியோதனன் திரௌபதியை அடிமை கொண்டதால் அவளை அடைந்து மகிழலாம். அதேநேரம் அவள் கணவர் தருமர் அவளைப் பணயம் வைத்ததும் தவறல்ல. கணவருக்குத் தன் மனைவியைத் தான் விரும்பியவாறு நடத்தலாம்” என்று பீஷ்மர் கூறியதைக் கேட்டு மிகுந்த ஏமாற்றமும் அதிர்ச்சியும் அடைந்து, ஆற்றாமையுடன், “மிக நல்ல நீதிநெறி சொல்கிறீர் ஐயா! வேத சாத்திரம் உணர்ந்த நீரா இப்படிச் சொல்வது?” என மிக ஏமாற்றத்துடன் சொல்கிறாள் திரௌபதி.

“செல்லு நெறியார் செய்கையிங்கு பார்த்திடிலோ
கல்லும் நடுங்கும் விலங்குகளும் கண்புதைக்கும்.
செய்கை அநீதியென்று தேர்ந்தாலும், சாத்திரந்தான்
வைகும் நெறியும் வழக்கமும்நீ கேட்பதனால்
ஆங்கவையும் நின்சார்பில் ஆகா அவையுரைத்தேன்
தீங்கு தடுக்குந் திறமிலேன்” என்றந்த
மேலோன் தலை கவிழ்ந்தான்.

பீஷ்மர் மட்டுமல்ல, அந்தச் சபையில் எத்தனையோ சான்றோர்கள் இருந்தார்கள் அவர்கள் அங்கு நடந்த அநீதியைப் பீஷ்மர் போல ஏற்றுக் கொண்டார்கள் போலத் தெரிகிறது.

மேலும் திரௌபதி, “முன்பு இராவணன் சீதையைக் கண்டு மயங்கி அவளைத் தூக்கிச் சென்று அசோகவனத்தில் இருத்திவிட்டுச் சென்று, தான் செய்தது சரியா என்பதை உறுதிப்படுத்த மந்திரிமார், சாத்திரிமார்களை அழைத்து அவர்களிடம் ஆலோசனை கேட்டார். அவர்களும், நீ சரியானதையே செய்திருக்கிறாய். இது தருமநெறிக்கு ஏற்ற செயல்தான் என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமோதித்தனராம்" என்று கூறுகிறாள். காலத்துக்குக்காலம் நீதி முறைகளும் மாறியே வந்திருக்கின்றன. அதற்கு முந்திய காலத்தில் திருவள்ளுவர், ஔவையார் போன்ற புலவர்கள் எழுதிய நூல்களில் சுட்டிக்காட்டப்படும் நீதி எல்லாம் மக்களை நல்வழிப் படுத்தப் போதுமானவையாகவே இருந்தன. அங்கு அறநெறி போற்றப்பட்டது. மக்கள் நிம்மதியாகவும் சந்தோஷமாகவும் வாழ வழிவகுக்கப்பட்டது.

கலியுகம் பிறந்துவிட்டதால் அதர்மங்கள் நடக்கும் என்பதைப் பாரதியார் "கலியும் மகிழ்ந்தான்" என்று குறிப்பிடுகிறார். அதனால் அங்கு நடந்த அதர்ம நிகழ்வுகளை அங்குள்ள சான்றோர்கள் எல்லாம் நீதியானது என ஏற்றுக்கொண்டனர். ஆனால், இராமாயணம் தோன்றிய காலத்தில் மீண்டும் தர்மநெறி தழைக்க ஆரம்பித்ததால் நீதிநெறி உணர்ந்து இராவணன், சிவனை நோக்கித் தவம் செய்து வரம் பெற்றான். அதனால் அவனது மனச்சாட்சி தான் செய்வது தவறென்று சொன்னதால், அமைச்சர்களையும் சாத்திரங்கள் அறிந்தோரையும் கூப்பிட்டு அவர்கள் கருத்தைக் கேட்கிறான். அவர்கள் சரியென அறிவுரை கூறிய போதும் அவன் அதர்மமாக அவளை அநுபவிக்க முயற்சிக்கவில்லை.

ஆனால், மகாபாரதம் தோன்றியபோது நிலைமை மாறிவிட்டது. அதனால் திரௌபதி "பேய் அரசு செய்தால், பிணம் தின்னும் சாத்திரங்கள்" என்று குறிப்பிடுகிறாள். தொடர்ந்து, "வஞ்சனை இல்லாத உயர்ந்த குணமுள்ள மன்னர்களான பாண்டவர்களை வற்புறுத்திச் சூதாட அழைத்தது வஞ்சனையான செயல் அல்லவா? அது நேர்மையான செயலா? இது ஏற்கனவே திட்டமிட்டுச் செய்த செயல் அல்லவா? புதிய மண்டபத்தைக் கட்டி அதனைப் பார்க்க வாருங்கள் என்று அழைத்தது பாண்டவரின் அரசாட்சியைக் கைப்பற்றவல்லவா? பெண்ணின் பெருமையை உணர்ந்தவர்களே! நீங்கள் பெண்களுடன் பிறக்கவில்லையா? ஒரு பெண்ணை அதுவும் இன்னொருவன் மனைவியை அடிமையாக்கி அநுபவிப்பது பாவமல்லவா? பெண்பாவம் கொடியது, இதனால் பெரும் பழி வந்து சேரும். தயவு செய்து என் நிலையைப் புரிந்து என்னை இந்தக் கொடுமையிலிருந்து காப்பாற்றுங்கள்" என்று கைகூப்பிச் சபையோரைக் கெஞ்சி மன்றாடுகிறாள். வேடனின் அம்பு பட்டபோது ஒரு மான் எப்படித் துடிதுடித்துப் போகுமோ அது போலப் பாஞ்சாலியும் அழுது துடித்தாள். அவளது மலர் சூடிய கூந்தல் நிலத்தில் புரள, அழுதாள்.

"மாய முணராத மன்னவனைச் சூதாட
வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ? நேர்மையோ?
முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கையன்றோ?
மண்டபம் நீர்கட்டியது மாநிலத்தைக் கொள்ளவன்றோ?
பெண்டிர் தமையுடையீர் பெண்களுடன் பிறந்தீர்!
பெண்பாவ மன்றோ? பெரியவசை கொள்வீரோ?
கண்பார்க்க வேண்டும்!" என்று கையெடுத்துக் கும்பிட்டாள்.
அம்புபட்ட மான்போல் அழுது துடிதுடித்தாள்.
வம்பு மலர்க் கூந்தல் மண்மேற் புரண்டுவிழ.....

பாண்டவரின் தேவி இவ்வாறு அழுது புலம்புவதைக் கண்டு பண்பாடற்ற துச்சாதனன் சிறிதும் இரக்கமின்றி மிகக் கேவலமாக நடந்து கொள்கிறான். அறநெறியறியாத முட்டாள் அல்லவா துச்சாதனன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பஞ்சபூதத் தலங்களுக்கான தேவாரங்கள்

நிலம் - காஞ்சி:

திருமுறை 1 பதிகம் 133, திருமுறை 2 பதிகம் 12, திருமுறை 3 பதிகம் 41, திருமுறை 3 பதிகம் 114, திருமுறை 4 பதிகம் 7, திருமுறை 4 பதிகம் 44, திருமுறை 4 பதிகம் 99, திருமுறை 5 பதிகம் 47, திருமுறை 6 பதிகம் 64 திருமுறை 6 பதிகம் 65, திருமுறை 7 பதிகம் 61

நீர் - திருவானைக்கா:

திருமுறை 2 பதிகம் 23, திருமுறை 3 பதிகம் 53, திருமுறை 3 பதிகம் 109 திருமுறை 5 பதிகம் 31, திருமுறை 6 பதிகம. 62, திருமறை 6 பதிகம் 63 திருமுறை 7 பதிகம் 75

தீ - திருவண்ணாமலை:

திருமுறை 1 பதிகம் 10, திருமுறை 1 பதிகம் 69, திருமுறை 4 பதிகம் 63, திருமுறை 5 பதிகம் 4, திருமுறை 5 பதிகம் 5

காற்று - திருக்காளத்தி:

திருமுறை 3 பதிகம் 36, திருமுறை 3 பதிகம் 69, திருமுறை 6 பதிகம் 8 திருமுறை 7 பதிகம் 26

ஆகாயம் - கோயில் (சிதம்பரம்):

திருமுறை 1 பதிகம் 80, திருமுறை 3 பதிகம் 1, திருமுறை 4 பதிகம் 22 திருமுறை 4 பதிகம் 23, திருமுறை 4 பதிகம் 80, திருமுறை 4 பதிகம் 81 திருமுறை5 பதிகம் 12, திருமுறை 6 பதிகம் 1, திருமுறை 6 பதிகம் 2 திருமுறை 7 பதிகம் 90

ஐந்து தலங்களிலும்:

திருஞானசம்பந்தர் பதிகங்கள் - 13
திருநாவுக்கரசர் பதிகங்கள் - 20
சுந்தரமூர்த்தி சுவாமிகள் பதிகங்கள் - 4

இவை தவிர, எட்டாந் திருமுறையிலும், ஒன்பதாம் திருமுறையிலும், பதினொராம் திருமுறையிலும் பதிகங்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ முன்னேற்றச் சங்கத்தின்



## மேனாள் தலைவர்களின்



திரு வி நாகரத்தினம் *(90)*

திரு கு சிதம்பரப்பிள்ளை *(80)*

# பிறந்தநாள் வாழ்த்து

திரு சிதம்பரப்பிள்ளை அவர்களும் திரு நாகரத்தினம் அவர்களும் சைவ முன்னேற்றச் சங்கத்தில் முறையே 1984, 1991 ஆண்டுகளில் உறுப்பினராக இணைந்தார்கள். இருவரும் இன்றும் தொடர்ந்து சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறார்கள். இருவருமே சங்கத்தின் தலைமைப் பதவியிலும், காப்பாளர் பதவியிலும் இருந்து சங்கத்தின் பல சேவைகளில் தம்மை இணைத்துச் செயற்பட்டுள்ளார்கள்; செயற்படுகிறார்கள். அது தவிர, செயலாளர், பொருளாளர் போன்ற முக்கிய பதவிகளிலும் செயற்குழுவில் இருந்து சங்கத்தின் பல திட்டங்களை முன்னெடுப்பதற்கு உதவியுள்ளார்கள்.

சைவ முன்னேற்றச் சங்கத்துக்கென ஒரு நிரந்தரமான பணிமனை திரு சிதம்பரப்பிள்ளை அவர்கள் தலைவராக இருந்த வேளை வாங்கப்பட்டது. சங்கத்தின் சட்ட ஆலோசகரகவும் சங்கம் நடத்தும் மறைந்தவர்களுக்கான இறுதிக் கிரியைகள் ஒழுங்குசெய்வதிலும் இன்றும் இவர் செயற்பட்டு வருகின்றார். இந்த ஆண்டு காப்பாளர் பதவியில் உள்ளார்.

ஸ்ரீசிவகாமசுந்தரி உடனாய ஸ்ரீ சிதம்பரேசுவரர் கோயில் தேர்த்திருவிழா நடைபெற உள்ளூராட்சி அலுவலகத்தில் அநுமதி பெற்று உதவியவர் திரு நாகரத்தினம் அவர்கள். பணிமனைக் கட்டடத்தைப் பராமரிப்பதிலும் மூன்று ஆண்டுகள் பணியாற்றியவர். சங்கத்தின் பல்வேறு செயல் திட்டங்களிலும் பணிபுரிந்தவர். தற்போது சங்கத்தின் உபபோஷகராக உள்ளார்.

இவர்கள் இருவரும் தாம் வதியும் இடத்தில் சமூகசேவைகளிலும் ஈடுபட்டு விருதுகளும் பெற்றுள்ளார்கள் என்பது நமக்குப் பெருமை தருகிறது. திரு நாகரத்தினம் அவர்களின் தொண்ணூறாவது பிறந்த தினமும் திரு சிதம்பரப்பிள்ளை அவர்களின் எண்பதாவது பிறந்த தினமும் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வருகின்றன. இருவரும் மேலும் பல்லாண்டு நலமுடன் வாழ்ந்து தமது சேவைகளை நல்க எல்லாம் வல்ல ஸ்ரீசிவகாமசுந்தரி உடனாய ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வணங்குகிறோம்; கலசத்தின் சார்பில் இருவரையும் வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சக்தி

## (அன்னை வடிவில் இறை ஆற்றல் - சரஸ்வதி)

திருமதி தவமணிதேவி கணேசலிங்கம்
மூதாளர் அன்பு இல்லம் - முகமாலை

சக்தி என்பவள் படைப்புக்கெல்லாம் அன்னையாக, பரம்பொருளின் ஆற்றல்களின் தொகுப்பாக விளங்குகிறாள். அணுவில் அடங்கியிருக்கும் சக்தியும் பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும் சக்தியும் அவளேதான்! இறைவனின் ஆற்றலை உணரும் போது சக்தியின் பிரசன்னத்தையே உணருகின்றோம்.

நவீன அறிவியல் இயற்கைச் சக்தியைப் பற்றி புதிய கருத்துக்களைக் கண்டு பிடித்திருக்கிறது. ஜடப் பொருள் என்றும் உருவமற்ற சக்தி என்றும் வேறுபாடு எல்லாம் கிடையாது. உருவமாயும் அருவமாயும் ஒரே சக்திதான் இயங்குகிறது.

எல்லாம் சக்திமயமாகக் காண்பது ஆன்மிகம். உலகத்தில் நாம் காணும் ஜடப்பொருள்களுக்கும் மனம், உயிர், என்பவற்றுக்கும் என்ன தொடர்பு என்பதை எல்லாம் விஞ்ஞானம் கண்டுபிடிக்கவில்லை.

எதிரும் புதிருமாகவும் வெளிப்படையாகவும் மறைந்திருக்கும் எல்லாமே அவள் வண்ணம் என்பது ஆன்மிகம்! அனைத்து உயிரினங்களுக்கும் உயிர் வாழ்க்கை எல்லாமே பராசக்தியின் வடிவம் தான். இறைவனின் முழு ஆற்றல் சக்தி!

தந்திர நூல்கள் தரிசிக்கும் சக்தி தேவியும், வேதாந்தங்கள் தரிசிக்கும் பரப்பிரம்மமும் ஒன்றுதான். அதையே சிலசமயம் பிரம்மம் என்கிறோம். ஆடாது அசையாது நிற்கும் போது பிரம்மம். விரிந்து பரவுவதோ சுருங்கி ஒடுங்குவதோ இல்லாத போது பிரம்மம் வளர்தலும் தேய்தலும் இல்லாத போது பிரம்மம்.

இந்தப்பிரபஞ்சம் முளைப்பதற்குக் காரணமாக இருந்த விதை கூட இல்லாது அந்த விதைக்கும் முந்தைய ஒரு கருப்பொருளாக ஒன்று இருந்தால் அது பிரம்மம். அக்கருப் பொருளிலிருந்து இப்பருப் பொருளாகிய பிரபஞ்சம் உற்பத்தி ஆகத் தொடங்குவது சக்தியின் வெளிப்பாடு.

இந்துசமய புராண இலக்கியத்திலும் தந்திர நூல்களிலும் இறைவனின் பேராற்றல் ஒரு பெண் தெய்வமாகவே, தேவியாகவே உருவகிக்கப்படுகிறது.

மும்மூர்த்திகளில் ஒவ்வொரு மூர்த்திக்கும் ஒரு தேவி துணையாக வருகிறாள்.

பிரம்மாவுக்கு - சரஸ்வதி
விஷ்ணுவுக்கு - இலட்சுமி
சிவனுக்கு - பார்வதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



ஆனால், சரஸ்வதியையும் இலட்சுமியையும் விடப் பார்வதி தேவிதான் அனைத்து உயிரினங்களுக்கும் அன்னையாக, கடந்த சில நூற்றாண்டுகளாக வணக்கத்துக்கும் போற்றுதற்கும் உரியவளாக இருந்து வருகிறாள்.

சரஸ்வதி:

பிரபஞ்சம், படைப்பு அனைத்துமே சரஸ்வதியினுடைய அருளும் சக்தியும் அறிவுத்திறனும் ஞானமும் சேர்ந்து நிகழ்வதுதான். பிரபஞ்சம் ஒழுங்காக இயங்க இந்த அன்னை அருளும், சக்தியும், அறிவுத்திறனும் ஞானமும் சேர்ந்து நிகழ்வது தான். பிரபஞ்சம் ஒழுங்காக இயங்க இந்த அன்னை அருளும் விதிகளே அடிப்படை. கலைகள், விஞ்ஞான, மெய்ஞானங்கள், கைவ-னைக் கலைகள், தொழில் நுட்பங்கள் எதுவாயினும் அவள் அருளே.



அறியாமை இருளை அழிப்பவள் என்பதால் வெண்மையான தோற்றம் கொண்டவள். தாமரை மலரில் அவள் வீற்றிருக்கும் அழகே அழகு.

கரங்களில், வீணை, ஜெபமாலை, புத்தகம், சிலசமயம் பாசக்கயிறு, அங்குசம், தாமரை, திரிசூலம், சங்கு, சக்கரம் ஆகியவற்றை வைத்திருப்பாள். ஐந்து முகங்களோடு காட்சி தருவதும் உண்டு. கழுத்தில் நீல நிறம் தெரியலாம்.

மூன்று கண்களோடும் நீல கண்டத்தோடும் துர்க்கையாக வருவாள். அப்போது அவளும் பார்வதியும் ஒன்றுதான்.

சரஸ்வதிக்குத் தனியாக வாகனம் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. பிரம்மாவின் அன்னப்பட்சி வாகனத்தையே உபயோகப்படுத்திக் கொள்வாளாம்.

பிரம்மாவின் படைப்புத் திறனும் அறிவாற்றலும் சரஸ்வதியாக உருவெடுத்தது என்பர். அவள் இல்லாமல் பிரபஞ்சத்தின் பரிணாம வளர்ச்சி ஒழுங்காக நடைபெற முடியாது. நான்கு திசைகளையும் காட்டும் அவளுடைய கரங்கள் தங்கு தடையின்றி நாற்றிசையும் அவளுடைய அருளையும் சக்தியையும் காண்பிக்கின்றன.

அவள் கையில் வைத்திருக்கும் நூலில் இல்லாத பாடமே இல்லை. இதயம் பண்படாமல், இதயம் இளகாமல் மென்மையான உணர்வுகள் நமக்குள் எழும்பாமல் வெறும் ஏட்டுப்படிப்பாக அமைந்துவிடும் படிப்பு உண்மையான படிப்பாக இருக்க முடியாது. அதனால்தான் சரஸ்வதி கையில் ஒரு வீணையை வைத்து நம் இதயத்தைக் கனிய வைக்கிறாள். அறிவின் முதிர்ச்சியோடு இதயத்தின் கனிவும் வேண்டும். மேலும் பக்தி இல்லாத ஞானத்தால் என்ன பயன்? அது ஞானமே ஆகாது. உண்மையான ஞானமும் பக்தியும் ஒன்றுதான். ஆகவே தான் அவள் ஜெபமாலையை வலது கையில் பிடித்திருக்கிறாள். தியானத்திற்கும், ஜெபத்திற்கும் யோகத்திற்கும் மற்ற எல்லா விதமான தவ முயற்சிகளுக்கும் வேண்டியது அவள் அருளே! புத்தகம் இடது கையில் என்பதால் ஆன்மிக அறிவு வளர்ச்சியும், பக்தியும் வெறும் உலகியல் சார்ந்த அறிவு வளர்ச்சியை விட முக்கியமானது என்றாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RUBY'S

CATERING

**020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|
|  |  |  |

**திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா**

**கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்**

**அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா**







## ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton

THISTLE HOTELS
more than just accommodating

Holiday Inn

*உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org